# புதிய தமிழ் அக்ஷரகணிதம்

## (ALGEBRA IN TAMIL)

### பகுதி I-II.

ஆறும்வகுப்பு ஆரம்பமாக ஆசிரிய பரீட்சைவரைக்கும்
உபயோகிக்கத் தக்கது.

13-8-32 ல் வித்தியா கர்த்தராலும்
16-9-52 ல் வித்தியாபிரசுர சபையாராலும்
அங்கீகரிக்கப்பெற்றது.


ஆக்கியோன் :

**திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள்**

Teacher: Sivaguru Vithiyasalai, Valvettiturai.
Author of : Geometry, Arithmetic, Geography
for Std. II-V (All Approved by E. P. B.)
etc. in Tamil.



ஆறும் பதிப்பு.

பிரசுரம்.

வடலங்கா புத்தகசாலை

பருத்தித்துறை.

[விலை ரூபா 3-

December 1954]

| | |
|---|---|
| முதற் பதிப்பு | —1931 |
| இரண்டாம் பதிப்பு | —1933 |
| மூன்றாம் பதிப்பு | —1935 |
| நான்காம் பதிப்பு | —1953 |
| ஐந்தாம் பதிப்பு | —1953 |
| ஆறாம் பதிப்பு | —1954 |


*All Rights Strictly Reserved*

ராஜன் எலெக்டிரிக் பிரஸ், சென்னை-1.

# வணக்கம்

பிறநாட்டு நல்அறிஞர் சாஸ்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்.

சுதந்தர நாடாகத் திகழும் இலங்கையில் இன்று தாய்மொழிமூலம் உயர் வகுப்புகளிலும் கல்வி போதிக்கும் சுபகருமம் ஆரம்பமாகின்றது. தற்போது தமிழாசிரிய மணிகளாகத் திகழும் பல அன்பர்கட்கு ஆசிரிய கலாசாலைப் பிரவேசத்திற்குத் தகுதிப் பரீக்ஷையாக விளங்கிய சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீக்ஷை (பிறிலிம் அல்லது எஸ். எஸ். ஸி.)க்குக் கட்டாய பாடமாக இருந்துவந்த கணிதத்தில் ஒருகாலம் அக்ஷர கேத்திர கணிதங்களும் இணைந்திருந்தன. ஆகவே இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் (25-5-31ல்) யாம் இலங்கை மாணவர்க்கு உதவும் வகையில் முதன்முதலாகத் தமிழில் எழுதிச் சென்னையிற் பதிப்பித்த அக்ஷரகணித நூலும் இதனைத்தொடர்ந்து வெளிவந்த கேத்திர கணித நூலும் பல அறிஞரின் பெருமதிப்பையும் ஆசிரியர்களின் பேராதரவையும் பெற்றுவிளங்கின. வித்தியாகர்த்தரின் அங்கீகாரமும் பெற்றன. கலாசாலைகளில் தாய்மொழிமூலம் போதனை ஆரம்பிக்கும் இத்தினத்தில் எமது கணித நூல்கள் வித்தியா பிரசுர சபையாரின் அங்கீகாரமும் பெறுகின்றன. இன்று எமது அக்ஷரகணிதநூல் நான்காம் பதிப்பாகப் பல திருத்தங்களோடும், விரிவான விளக்கங்களோடும், கூடுதலான அப்பியாசங்களோடும் வெளியாகின்றது. இதனைத் தொடர்ந்து இலங்கை மாணவர்க்குதவும் வகையில் உயர்வகுப்புப் பூமிசாஸ்திரங்களும் வெளியாகின்றன. இதிகாசம், சுகாதாரம், விஞ்ஞானம் முதலாம் நூல்களும் எமது பிரசுரங்களாக விரைவில் வெளிவரும். இறைவனருளும், வித்தியாபகுதியாரின் அங்கீகாரமும், அன்பர்களின் பேராதரவுமே எமது சலியா உழைப்பிற்கு ஊக்கமளிப்பன.

**அனைவருக்கும் எமது தாழ்மையான வணக்கம் !**

'கலாபவனம்'
மேலைப்புலோலி
பருத்தித்துறை.
2-3-53

வே. சிவக்கொழுந்து

## ஆசிரியர்க்காய குறிப்புகள்.

1. வேணடிய திருத்தங்களைத் தயவுசெய்து மறுபதிப்பிற கவனித்தற்பொருட்டுக் குறித்தனுப்புக.

2. அக்ஷர இலக்கங்களாகிய $a$, $b$, $c$, $d$ முதலாம் எழுத்துக்களை உரிய முறையில் எழுத மாணவர் பயிலல் அவசியம்.

3. $a^2 = a$ வர்க்கம் அல்லது $a$ இன் இரண்டாம்படி, $a^3 = a$ கனம் அல்லது $a$ இன் மூன்ரும்படி, $a^4 = a$ இன் நாலாம்படி இவ்வாறு பிறவும் அமையும். **படி** என்னும் சொல்லுக்குப் பதில் **காகிதம்** எனவும் உபயோகிக்கலாம்.

**ஆக்கியோன்.**

## வகுப்புகளுக்கு உரிய பாடத்திட்டம்

பாடத்திட்டமும் பொழிப்பும் 1941.

### 6-ந் தரம்

1. **குறியீடுகளும் இலகுவான சமீகரணங்களும்.**
   - i. இலகுவான சூத்திரங்களை அமைப்பதில் குறியீடுகளின் உபயோகம்.
   - ii. குறியீடுகளை உபயோகித்துக் கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்.
   - iii. இலகுவான சமீகரணங்களும் சமீகரணப் பிரயோகமும்.
   - iv. அடைப்புக் குறிகளின் உபயோகம்.

குறிப்பு: இங்கு தரப்பட்ட பகுதிகள் சேர இந்நூலில் பக். 1—18-ம் 35—38-ம் ஆறும் வகுப்புக்குப் பயிற்றுக. நான்கு விதிகள் 2-ம் பகுதிகளிலும் சுலபமான அப்பியாசங்களைச் சேர்த்துக்கொள்ளலாம்.

### 7-ந் தரம்

2. **முன்னிலும் கடுமையான சமீகரணங்கள்.**
   - i. பிரச்சினைக் கணக்குகளை இலகுவான சமீகரணங்கள் மூலம் விடுவித்தல்.
3. **இலகுவான கணன ரேகைகள்.**
   - i. காலாந்த வாழ்க்கைப் புள்ளி விபரங்களைக் கணன ரேகையினுற் குறித்தல்.
   - ii. கணன ரேகைகளைப் பார்த்து விளங்கிக்கொள்ளுதல்.
   - iii. நேராக வரையப்பட்ட கணன ரேகைகள்கொண்டு பிரச்சினைகளை (சமீகரணங்களை) விடுவித்தல்.

குறிப்பு: இங்கு தரப்பட்ட பகுதிகள் சேர இந்நூலின் பக் 1—65 வரை ஏழாம் வகுப்புக்குப் பயிற்றுக.

### 8-ந் தரம் (J. C. S.)

4. **ஏககாலச் சமீகரணங்கள் (கூட்டுச் சமீகரணங்கள்)**
   - i. ஏககாலச் சமீகரணங்களின் உபயோகத்தினுல் பிரச்சினைகளை விடுவித்தல்.
5. **இலகுவான கணனரேகைப் படங்கள்**
   - i. சந்தை வியாபார விற்பனை, வேறுபுள்ளி விபரங்கள் இவற்றை விடுவிக்க இலகுவான கணன ரேகைகளை உபயோகித்தல்.
   - ii. எண்கணிதப் பிரச்சினைகளுக்கும் அளவுகளுக்கும் இலகுவான சினைகளை உபயோகித்தல்.

குறிப்பு: இங்கு தரப்பட்ட பகுதிகள் சேர இந்நூலில் பக். 160 வரை வர்க்க சமீகரணத்தையும் அதிகடின கணக்குகளையும் நீக்கி எட்டாம் வகுப்புக்குப் பயிற்றுக. எஸ். எஸ். ஸி. ஆசிரிய பரீட்சைகளுக்கு இந்நூல் முழுமையையும் அக்ஷர கணிதம் 3-ம் பாகத்தையும் பயிற்றுக.

## OPINIONS.

### K. S. ARULNANDHY, M. Sc., (Lond.) *Kandy*,
### *Inspector of Schools* 14-10-1931

இக்கால நன்முறைகளைத் தழுவி எமது நாட்டுச் செந்தமிழ்க் கல்விக் கழகங்களில் கல்வி பயிற்றுவதற்குப் பல குறைகளுண்டு. அவற்றுள் மாணவர்களுக்கு வேண்டிய பாடப் புஸ்தகங்களும் ஆசிரியர்களுக்குரிய துணை நூல்களுமில்லாமை பெருங்குறையாகும். இக்குறையை உணர்ந்துள்ள பல அபிமானிகளுமறிவிற் பெரியோரும் இடையிடையே நூல்களை யியற்றி அச்சிட்டு வெளியிட்டிருப்பினும் இத்துறையில் எந் தாய்நாட்டின் முன்னேற்றத்திற் கென்றுழைப்பதற்கு இன்னும் பலர் புகுதல் அத்தியாவசியமானது.

இவ்வாறு முன்வந்த அபிமானிகளுள் ஒருவரான ஸ்ரீ சிவக்கொழுந்து அவர்கள் தாளுக்கியுள்ள அக்ஷரகணிதமென்னும் நூலால் நெடுநாட்களாகவுள்ளோர் பெருங்குறையை நீக்கியுள்ளார். அதற்காக நாமவருக்குப் பெரிதும் கடப்பாடுடையேம்.

K. S. அருள்நந்தி.

## S. SIVAPATHA SUNTHARAM, Esqr., B. A.

### Principal, "Victoria College"

ஸ்ரீ சிவக்கொழுந்து அவர்கள் எழுதிய அக்ஷர கணிதத்தை நான் வாசித்துப் பார்த்தேன். எம்மூரிலே இப்படியான ஒரு நூல் நெடுநாளாய்த் தேவைப்பட்டும் இதற்குமுன் ஒருவரு மியற்றவில்லை. ஒருமொழியில் முன்னில்லாத ஒரு சாத்திரத்தைச் செய்வதற்குக் கூர்ந்த மதியும் அகன்ற அறிவும் வேண்டும். இவ்வாக்கியோனில் இந்த இரண்டு இலட்சணங்களும் உள்ளன என்பது இந் நூலிலிருந்து பெறப்படும். இதிலே விதிகள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. உதாரணக் கணக்குகள் எல்லா இனங்களிலும் விரவியிருத்தலாற் கற்போருக்குப் பெருந்துணையாகின்றன. அப்பியாசங்கள் மட்டாயிருத்தலால் எவற்றைச் செய்வது எவற்றை விடுவது என்ற கவலைக்கிடமில்லாமல் எல்லாஞ் செய்யவேண்டியனவாகின்றன. இப்புத்தகம் பள்ளிக்கூடங்களிலே தடையின்றி ஏற்கப்படுமென்று எண்ணத்தக்கதாயிருக்கிறது.

**சு. சிவபாதசுந்தரம்**

சுழிபுரம், விக்ரோறியா கலாசாலை. பிரசோற்பத்தி ஆனி ௬

★

## SWAMI VIPULANANDA

### Professor of Tamil,

அண்ணாமலை சர்வகலாசாலை, அண்ணாமலைநகர். 26-9-31

**......வே. சிவக்கொழுந்து அவர்களுக்கு,**

தாங்கள் அன்பு கூர்ந்து அனுப்பிய அக்ஷர கணித நூற் பகுதி கிடைத்தது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல்வேண்டும்" என்னும் பெரியாருரையை மேற்கொண்டு தாங்கள் எழுதிவருகின்ற கணிதநூல் இளமாணவர்க்குப் பெரிதும் பயன்படு நீர்மையது. இத்தகைய நன்முயற்சிகளிலே தாங்கள் இடையீடில்லா ஊக்கத்தோடு முயன்று வருவீர்களாக.

இறைவனருளால் எல்லா நலனும் உண்டாகுக!

அன்புள்ள

**விபுலானந்த சுவாமி.**

# பொருளடக்கம்.

## CONTENTS.


| அப்பியாசம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | அக்ஷர இலக்கப் பிரயோகம் I | 1 |
| 2. | கூட்டல் பகுதி க | 3 |
| 3. | கழித்தல் பகுதி க | 5 |
| 4. | பெருக்கல் பகுதி க | 7 |
| 5. | பிரித்தல் பகுதி க | 10 |
| 6. | பிரதிகரணம் (Substitution) | 12 |
| 7. | தனிச்சமீகரணம் பகுதி க (Simple Equation) | 14 |
| 8. | அக்ஷர இலக்கப் பிரயோகம் II | 16 |
| 9. | பல இன அப்பியாசம் I | 18 |
| 10. | கூட்டல் பகுதி உ | 20 |
| 11. | கழித்தல் பகுதி உ | 23 |
| 12. | யோசனைக் கணக்குகள் I (Problems) | 24 |
| 13. | பெருக்கல் பகுதி உ | 26 |
| 14. | பிரித்தல் பகுதி உ | 29 |
| 15. | யோசனைக் கணக்குகள் II (Problems) | 32 |
| 16. | அடைப்புக்குறி நீக்கம் பகுதி க | 35 |
| 17. | அடைப்புக்குறி நீக்கம் பகுதி உ | 38 |
| 18. | தனிச்சமீகரணம் பகுதி உ | 41 |
| 19. | அக்ஷர இலக்கப் பிரயோகம் III | 47 |
| 20. | கணன ரேகைகள் | 53 |
| 21. | பல இன அப்பியாசம் II | 59 |
| 22. | கூட்டுச்சமீகரணம் | 65 |
| 23. | அக்ஷர இலக்கப் பிரயோகம் IV | 73 |
| 24. | சினைகள் எழு பிரிவுகள் (Factors) | 77 |
| 25. | சி. சா. மு; பெ. சா. மு. வர்க்கமூலம் L.C.M;H.E.F.etc. | 94 |
| 26. | பின்னம் நான்கு பகுதிகள் (Fractions) | 98 |
| 27. | மீட்டர் பயிற்சிகள் | 109 |
| 28. | வர்க்கசமீகரணமும் பிறவும் (Quadratic Equation) | 115 |
| 29. | பரீக்ஷை வினாக்கள் | 131 |
| 30. | மாதிரிப் பரீட்சைக்ஷப் பத்திரங்கள் | 141 |
| 31. | விடைகள், விசேட விதிகள் | 145 |

# அக்ஷர கணிதம்

---

## அத்தியாயம் 1.

## அக்ஷர இலக்கப் பிரயோகம்-
## நான்கு விதிகள் ஆரம்ப பகுதி.

எண்கணித விதிகளையே தன் செய்கை முறைகட்கும் விதிகளாகக் கொண்டு சாதாரண இலக்கங்களுடன் அக்ஷர இலக்கங்களையும் எண்களாகக் கொண்டு வழங்கப்பட்டு வருங்கணிதம் "**அக்ஷர கணிதம்**" அல்லது "**வீச கணிதம்**" எனப்படும்.

ஆகையால் அக்ஷர கணிதத்தில் பிரயோகிக்கப் பட்டிருக்கும் $x$, $y$ முதலாம் எழுத்துக்களையும் ஒவ்வோர் இலக்கமாகவோ அல்லது எண்ணாகவோ கருதல் வேண்டும்.

$x+y=45$ ஆனல் $x$ உம் $y$ யும் ஏதோ இரு எண்களாகவும் அவற்றின் கூட்டுத்தொகை 45 ஆகவுங் கருதப்படும்.

$x-y=4$ ஆனல் $x$ உம் $y$ யும் ஏதோ இரு எண்களாகவும் அவற்றின் வித்தியாசம் 4 ஆகவுங் கருதப்படும்.

$x$ ஐயும் $y$ ஐயும் கூட்டினல் $= x+y$

$x$ இல் $y$ ஐக் கழித்தால் $= x-y$

$x$ ஐ $y$ ஆற் பெருக்கினல் $= x \times y = xy$

$x$ ஐ $y$ ஆற் பிரித்தால் $= x \div y = \dfrac{x}{y}$

$x=8$ எனவும், $y=2$ எனவுங் கொள்க.

அப்போது $x+y=8+2=10$

$x-y=8-2=6$

$x \times y=8\times 2=16$

$x \div y=8\div 2=4$

**உதாரணம் 1.** நான் காலை $a$ மைல் தூரமும் மாலை $b$ மைல் தூரமும் நடந்தேன். நான் நடந்த தூரமென்ன?

$a=5$, $b=3$ ஆயின் மறுமொழி யாது?

**செய்கை.**

நான் நடந்ததூரம் காலையில் $= a$ மைல், மாலையில் $= b$ மைல். ஆகையால் மொத்தம் $= a + b$ மைல். மறுமொழி.

$a = 5$, $b = 3$ ஆயின் $a + b = 5 + 3 = 8$ மைல் மறு.

**உதாரணம் 2.** ஒரு மாணவனுக்குக் கொடுபட்ட $x$ கணக்குகளில் $y$ கணக்குகள் செய்தான். செய்யாத கணக்குகளெத்தனை?

**செய்கை.** கொடுபட்ட கணக்குகள் $= x$

செய்த ,, $= y$

∴ செய்யாத ,, $= x - y$ மறு.

**உதாரணம் 3.** $n$ இலும் பார்க்க 27 எவ்வளவு கூட?

$n = 18$ ஆனல் மறுமொழி யாது?

**செய்கை.** பெரிய எண் $= 27$ சிறிய எண் $= n$

∴ வித்தியாசம் $= 27 - n$ மறு.

$n = 18$ ஆனல் $27 - n = 27 - 18 = 9$ மறு.

## அப்பியாசம் 1.

**1.** ஓர் கலவன் பாடசாலையில் 65 மாணவரும் 30 மாணவிகளும் உளர். அப்பாடசாலையிலுள்ள பிள்ளைகளெத்தனை?

ஓர் கலவன் பாடசாலையில் $a$ மாணவரும் $b$ மாணவிகளுமுளர். அப்பாடசாலையிலுள்ள பிள்ளைகள் எத்தனை?

**2.** 100 தோடம்பழங்களில் 75 பழங்கள் விற்றபின் மீதி எத்தனை?

$x$ தோடம்பழங்களில் $y$ பழங்கள் விற்றபின் மீதி எத்தனை?

**3.** 25 உடன் எதனைக் கூட்டினல் 60 ஆகும்?

$x$ உடன் எதனைக் கூட்டினல் 45 ஆகும்?

**4.** இரு எண்களின் கூட்டுத் தொகை 150. ஒன்று 90. மற்ற எண் யாது?

இரு எண்களின் கூட்டுத் தொகை $n$. ஒன்று $m$. மற்ற எண் யாது?

**5.** ஒரு வியாபாரி வாங்கிய 500 பழங்களில் $x$ பழங்கள் அழுகிவிட்டன. மிகுதி எத்தனை?

$x = 75$ ஆனல் மறுமொழி யாது?

6. ஒருவன் $m$ மைல் தூரமுள்ள ஓர் இடத்திற்குப் புறப்பட்டு $n$ மைல்கள் நடந்தான். இன்னும் அவன் எவ்வளவு தூரம் நடத்தல் வேண்டும்?

$m = 15$, $n = 9$ ஆனால் மறுமொழி யாது?

7. இரு எண்களின் கூட்டுத்தொகை 110. சிறிய எண் 40. பெரிய எண் யாது? இரண்டினதும் வித்தியாசம் யாது? இரு எண்களின் கூட்டுத்தொகை $x$. சிறிய எண் 19. மறு எண் யாது?

8. அடுத்துள்ள ஐந்து எண்களில் 12-ஐ முதல் எண்ணாகக் கொண்டு எழுதுக.

9. $x$ ஓர் எண்ணைக் குறிக்கும்போது அதற்கு முந்திய எண் யாது? $x$-ஐ நடு எண்ணாக வைத்து அடுத்துள்ள மூன்று எண்களெழுதுக.

## கூட்டல் (பகுதி-க)

$a$, $5a$, $7a$ முதலியன இன இலக்கங்கள் எனப்படும். $a$ ஓர் எண்ணைக் குறிக்கும்போது $5a$ அவ்வெண்ணின் ஐந்து மடங்கையும் $7a$ அவ்வெண்ணின் ஏழு மடங்கையும் குறிக்கின்றன. ஆகவே $5a$ இனதும் $7a$ இனதும் கூட்டுத்தொகை $a$ இன் தொகையைப்போல் 12 மடங்கு அதிகமாயிருக்கும்.

ஆகையால் $5a + 7a = 12a$

இவ்வாறு 4க + 6க = 10க.

ஆனால் $a$ யும் $b$ யும் இரு இலக்கங்களைக் குறிக்கும்பொழுது அவற்றின் தொடர்பு நமக்குத் தெரியாதபடியால் அவை இனமற்ற இலக்கங்கள் எனப்படும். ஆகவே, $a$ இனதும் $b$ இனதும் கூட்டுத் தொகையை $a + b$ என்ற அளவிலேயே கொள்ளலாம்.

இதுபோலவே $2x + 5y = 2x + 5y$.

**உதாரணம் 1.**

1. $a + 4a = 5a$
2. $a + 1 = a + 1$.
3. $a + b = a + b$
4. $5a - 3a = 2a$.
5. $-5a + 3a = -2a$
6. $-5a - 3a = -8$க.
7. $-3 - 10 - 4 = -17$.

**உதாரணம் 2.** கூட்டுத்தொகை காண்க:

1. க, 5க, 2க.
2. $-2x, -4x, 10x$.
3. $10a, -8a, -4a$.
4. $-5n, -2n, -12n$.
5. $\frac{1}{2}$ம, 2ம, $\frac{1}{4}$ம.

**செய்கை.**

1. க + 5க + 2க = 8க. மறு.
2. $-2x-4x+10x = 4x$. ,,
3. $10a-8a-4a = -2a$. ,,
4. $-5n-2n-12n = -19n$. ,,
5. $\frac{1}{2}$ம + 2ம + $\frac{1}{4}$ம = $2\frac{3}{4}$.ம. ,,

**உதாரணம் 3.** விடை காண்க:

1. $14m^2+2m^2-3m^2-5m^2$.
2. 5க—7ம + 10க + 2ம—6க.
3. $x^2+9xy-10x^2+2xy-6xy$.

**செய்கை.**

1. $14m^2+2m^2-3m^2-5m^2 = 16m^2-8m^2$
   $=8m^2$ மறு.
2. 5க—7ம + 10க + 2ம—6க
   = 5க + 10க—6க—7ம + 2ம
   = 15க—6க—7ம + 2ம = 9க—5ம. மறு.
3. $x^2+9xy-10x^2+2xy-6xy$
   $= -9x^2+5xy$. மறு.

## அப்பியாசம் 2.

கூட்டுக.

1. $+5, +5$
2. $+5, +8$
3. $+8, -5$
4. $-8, +5$
5. $5, 6, 4$
6. $-10, -5, -11$
7. $+a, +2a$
8. $+5a, -2a$
9. $a, 5a, 11a$
10. $2, 10, 14, -6$
11. $3, -4, 22$
12. —க, +5க, —11க

13. $x, 5x, 21x$ 14. $x, -5x, 21x$
15. $10$ச, $4$ச, $14$ச, $-$ச 16. ம, $-5$ம, $11$ம
17. $x^2, -8x^2, 10x^2$ 18. $x^3, 4x^3, 4x^3, -2x^3$
19. $2mn, -10mn$ 20. $\frac{1}{2}x, 1\frac{1}{2}x, \frac{1}{4}x, \frac{3}{4}x$
21. ம$^2$, $-\frac{1}{3}$ம$^2$ $-\frac{2}{3}$ம$^2$ 22. $xy, 8xy, -2xy, -5xy$

**விடை காண்க.**

23. $x+y-x+y$ 24. $x-y-x+y$
25. $2$க $+ 10$ப $+ 8$க $+ 5$ப 26. $5x-2y+8x+10y$
27. $2m^2-m+10m-5m^2$ 28. $3+x^3+5-7x^3-3$
29. $ab+2xy+10ab+6xy$
30. $17$கம $-8$சப $+2$சப $-15$கம
31. $2m+4n-5+4m-25n+5$
32. $p^3+7+q^3-7q^3-4+2p^3$
33. $x^3-11y^3+14y^3-15x^3+5y^3$
34. $\frac{1}{4}x+\frac{1}{2}y-\frac{3}{4}x+\frac{1}{2}x-1\frac{1}{2}y$
35. $7\frac{1}{2}x+5y-10+2\frac{1}{2}x+5y+10$

## கழித்தல் (பகுதி-க)

கழித்தற் கணக்கின் ஆரம்ப பகுதி சய அடையாளமுடைய இலக்கங்களை உபயோகப்படுத்திச் செய்த கூட்டற் கணக்குகளில் அடங்கியிருக்கின்றது.

கழித்தற் கணக்குகளிலும் இன இலக்கங்களிவை, இனமற்ற இலக்கங்களிவை எனப் பகுத்தே கணக்குகளைச் செய்தல் வேண்டும்.

கழித்தற் கணக்குகளில் கழிக்கப்படவேண்டிய இலக்கங்களின் அடையாளங்களை மாற்றிக் (அதாவது + உளதாயின் —ஆகவும், —உளதாயின் + ஆகவும் மாற்றிக்) கூட்டுக.

**உதாரணம் 1.**

8 இல் இருந்து 4 ஐக் கழி

**செய்கை.**

$$\begin{array}{r} 8 - \\ 4 \\ \hline \\ \hline \end{array} = \begin{array}{r} 8 \\ -4 \\ \hline \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8 \\ 4 \\ \hline 4 \\ \hline \end{array} \qquad \begin{array}{r} 8 \\ -4 \\ \hline 4 \\ \hline \end{array}$$

கழிப்பின் 4 கூட்டினால் 4

மேற்படி விளக்கங்களின் 8இல் 4 ஐக் கழிப்பினும் அல்லது 8 உடன் —4ஐக் கூட்டினும் விடை 4 என வருவதைக் கவனிக்கவும்.

**உதாரணம் 2.**

(1) $4x$ இல் இருந்து $2x$ ஐக் கழி.
(2) $10y$ இல் இருந்து $4y$ ஐக் கழி.
(3) $a$ இல் இருந்து $b$ ஐக் கழி.

**செய்கை.**

(1) $$\begin{array}{r} 4x - \\ 2x \\ \hline \\ \hline \end{array} = \begin{array}{r} 4x \\ -2x \\ \hline \\ \hline \end{array}$$

இங்கு $4x$இல் $2x$ ஐக் கழிப்பினும் $4x$ உடன் $—2x$ ஐக் கூட்டினும் விடை $2x$ எனவரும்.

ஆகவே $$\begin{array}{r} 4x \\ 2x \\ \hline 2x \\ \hline \end{array}$$ கழிப்பின் $2x$ மறு.

இவ்வாறே $$\begin{array}{r} 10y \\ -4y \\ \hline \end{array} = \begin{array}{r} 10y - \\ +4y \\ \hline \end{array}$$ விடை $14y$ எனவரும்.

(3) $$\begin{array}{r} a - \\ b \\ \hline \end{array} = \begin{array}{r} a \\ -b \\ \hline \end{array}$$ விடை $a—b$ என வரும்.

ஆனால் கழித்தற் கணக்குகளில் நாம் இவ்வாறு செய்கையில் அடையாளங்களை மாற்றிக் கூட்டாமல் மன அப்பியாசத்திலேயே அடையாளங்களை மாற்றிக் கிரியையைச் செய்தல் வேண்டும்.

**உதாரணம் 3.**

(1) 10 கம இல் இருந்து —3 கம ஐக் கழி.
(2) $3x + 4$ இல் இருந்து $x + 10$ ஐக் கழி.

**செய்கை.**

(1) $$\begin{array}{r} 10 \text{ கம} \\ -3 \text{ கம} \\ \hline 13 \text{ கம} \\ \hline \end{array}$$ கழித்தால் 13 கம மறு.

(2) $$\begin{array}{r} 3x + 4 \\ x + 10 \\ \hline 2x - 6 \\ \hline \end{array}$$ கழித்தால் $2x — 6$ மறு.

**உதாரணம் 4.** கழிக்குக. 4க + 2ம
2க — ம

**2க + 3 ம** மறு.

## அப்பியாசம் 3.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 8 | இல் இருந்து | | 3 | ஐக்கழி |
| 2. | 10 | ,, | ,, | —2 | ,, |
| 3. | 15 | ,, | ,, | 8 | ,, |
| 4. | 26 | ,, | ,, | —4 | ,, |
| 5. | $a$ | ,, | ,, | $b$ | ,, |
| 6. | $20x$ | ,, | ,, | $5x$ | ,, |
| 7. | $20x$ | ,, | ,, | $-5x$ | ,, |
| 8. | 16ம | ,, | ,, | —4ம | ,, |
| 9. | $-11ab$ | ,, | ,, | $-ab$ | ,, |
| 10. | $14x$ | ,, | ,, | $2y$ | ,, |
| 11. | $14m$ | ,, | ,, | $4n$ | ,, |
| 12. | $-7xy$ | ,, | ,, | $3xy$ | ,, |
| 13. | க + ச | ,, | ,, | க — ச | ,, |
| 14. | $x^2 + 3x$ | ,, | ,, | $2x - x$ | ,, |
| 15. | $10ax - 4by$ | ,, | ,, | $3ax + 5by$ | ,, |

---

## பெருக்கல் (பகுதி - க)

+ × + = +        + × — = —

— × — = +        — × + = —

அதாவது + அடையாளமுடைய ஓரிலக்கத்தை + அடையாளமுடைய இன்னோர் இலக்கத்தாற் பெருக்கினாலும், அல்லது — அடையாளமுடைய ஓர் இலக்கத்தை — அடையாளமுடைய இன்னோர் இலக்கத்தால் பெருக்கினாலும் இரு இடங்களிலும் + அடையாளமுள்ள பெருக்குத் தொகையும், + அடையாளமுடைய ஓர் இலக்கமும் — அடையாளமுடைய ஓர் இலக்கமும் பெருக்கப்படுமாயின் — அடையாளமுடைய பெருக்குத்தொகையும் மறுமொழிகளாய் வரும்.

**உதாரணம் 1.**

I $(+3) \times (+5) = +15$ மறு.

II $(-4) \times (-3) = +12$ „

III $(+3) \times (-2) = -6$ „

IV $(-10) \times (+6) = -60$ „

**உதாரணம் 2.**

(i) $a \times 5 = 5a$ மறு.

(ii) $a \times a = aa = a^2$ „

*(iii) $a^3 \times a^2 = aaa \times aa = a^5$ „

(iv) $க \times ம^2 = கம^2$ „

(v) $a^2 \times b^2 = a^2b^2$ „

(vi) $x^2 \times y^2 \times z = x^2y^2z$ „

(vii) $2a \times 5b = 10ab$ „

(viii) $5x \times 3x^2 = 15x^3$ „

அடையாளத்தை அடையாளத்தாலும், இலக்கத்தை இலக்கத்தாலும், எழுத்துக்களை எழுத்துக்களாலும் பெருக்கல் வேண்டும். $5a \times -7b = (+ \times -) \times (5 \times 7) \times (a \times b) = -35\,ab$ மறு.

**உதாரணம் 3.**

1. $-5க \times 3க = -15க^2$ மறு.

2. $4x^2 \times -6x = -24x^3$ „

3. $(-5)(-7x^3\,m^2) = 35x^3\,m^2$ „

4. $(-a^2\,x^2)(ax^2) = -a^3\,x^4$ „

**உதாரணம் 4.**

விடை காண்க : $(-2xy)\,(4x)$.

**செய்கை.** $(-2xy)(4x) = -2xy \times 4x = -8x^2y$. மறு.

---

* $a^3 \times a^2 = a^{3+2} = a^5$.

உதாரணம் 5.

1. $4x-2y+z$ ஐ $-3$ ஆற் பெருக்கு
2. $2க^2-10க+5$ ,, $2க$ ,,
3. $a+10b-5$ ,, $-2ab$ ,,

செய்கை.

1. $4x-2y+z$
$-3$
$-12x+6y-3z$ மறு.

2. $2க^2-10க+5$
$2க$
$4க^3-20க^2+10க$ மறு.

3. $a+10b-5$
$-2ab$
$-2a^2b-20ab^2+10ab$ மறு.

## அப்பியாசம் 4.

1. $5 \times 10 =$
2. $-4 \times 8 =$
3. $-10 \times -50 =$
4. $x \times -y =$
5. $8க \times 4க =$
6. $-10n \times 2n =$
7. $-7ab \times -7ab =$
8. $ax \times bx =$
9. $-2கமப \times 7க =$
10. $ab^2x \times -2abx =$

விடை காண்க.

11. $(3ab)(-4)$
12. $(-a)(+2a)$.
13. $(-a)(-2a)$.
14. $(4xy)(4xy)$.
15. $(-2xy)(2xy)$.
16. $(3xy)(-2y)$.
17. $(-4n)(-8n)$.
18. $(5க^2)(2க^2)$.
19. $(-10m^2)(2n^2)$.
20. $(14ax)(-8a^2b)$.

பெருக்குக.

21. $a + x$ ஐ $2x$ ஆல்
22. $10x - 4y + z$ ,, $-4x$ ,,
23. $5க^3 - 3க^2 + 2$ ,, $11$ ,,
24. $a^3 - 40a^2 + 10a$ ,, $12a^2$ ,,
25. $-11ax + 4by - 8c$ ,, $-3xy$ ,,

---

## பிரித்தல் (பகுதி - க)

$+ \div + = +$ $+ \div - = -$

$- \div - = +$ $- \div + = -$

அதாவது + அடையாளமுடைய ஓர் இலக்கத்தை + அடையாளமுடைய இன்னோர் இலக்கத்தாற் பிரித்தாலும் அல்லது — அடையாளமுடைய ஓர் இலக்கத்தை — அடையாள முடைய இன்னோர் இலக்கத்தாற் பிரித்தாலும் இரு இடங்களிலும் + அடையாளமுடைய ஈவுகளும், ஒன்று + மற்றது — அடையாளமுடைய இரு இலக்கங்கள் ஒன்றை ஒன்று பிரிக்குமாயின் — அடையாளமுடைய ஈவும் மறுமொழிகளாய் வரும்.

உதாரணம் 1.

I $(+24) \div (+4) = +6$ மறு.
II $(-10) \div (-2) = +5$ ,,
III $(+25) \div (-5) = -5$ ,,
IV $(-8) \div (+2) = -4$ ,,

உதாரணம் 2.

1. $12 \div 4 = \frac{12}{4} = 3$ மறு.
2. $a \div a = \frac{a}{a} = 1$ ,,

* 3. $x^5 \div x^3 = \frac{xxxxx}{xxx} = xx = x^2$ மறு.

4. $10m^4 \div 5m^2 = \frac{10m^4}{5m^2} = 2m^2$ ,,

---

* $\therefore x^5 \div x^3 = x^{5-3} = x^2$.

**உதாரணம் 3.**

1. $-10க \div 2க = \frac{-10க}{2க} = -5$ மறு.

2. $-26x^4 \div +13x^2 = \frac{-26x^4}{+13x^2} = -2x^2$ மறு.

3. $-36m^2 n^3 \div -9mn = \frac{-36m^2n^3}{-9mn}$
$= 4mn^2$ மறு.

**உதாரணம் 4.**

(1) $14m^3 - 21m^2 + 7m - 49$ ஐ 7 ஆற்பிரி.

$$7 \mid 14m^3 - 21m^2 + 7m - 49$$
$$2m^3 - 3m^2 + m - 7 \text{ மறு.}$$

**உதாரணம் 5.**

(2) $(45a^2x^3 + 30ax^4 - 105x^5 + 60x^8) \div (-15x^2)$

$$-15x^2 \mid 45a^2x^3 + 30ax^4 - 105x^5 + 60x^8$$
$$-3a^2x - 2ax^2 + 7x^3 - 4x^6 \text{ மறு.}$$

**உதாரணம் 6.** விடை காண்க.

$$\frac{49a^5x^2y}{-7a^2xy}$$

$49 \div -7 = -7$
$a^5 \div a^2 = a^3$
$x^2 \div x = x$
$y \div y = 1$

ஆனல் $-7 \times a^3 \times x \times 1$
$= -7a^3x$

$\therefore \frac{49a^5x^2y}{-7a^2xy} = -7a^3x$ மறு.

## அப்பியாசம் 5.

பிரிக்குக.

1. $8$ ஐ $4$ ஆல் 2. $-8$ ஐ $-2$ ஆல்.
3. $24a$ ,, $-3$ ,, 4. $10க$ ,, $5$ ,,
5. $26x^2$ ,, $2x$ ,, 6. $27ம$ ,, $-9ம$ ,,
7. $a-36ax$ ,, $6x$ ,, 8. $-81x^2y$ ,, $3xy$ ,,

விடை காண்க.

9. $\frac{4கம}{2க}$ 10. $\frac{-63x^3}{9x}$ 11. $\frac{-91x^2y^2}{7xy}$

12. $\frac{-51y^5}{-17y^2}$ 13. $\frac{-25a^2b^3}{5ab^2}$ 14. $\frac{-55ac}{-11ac}$

15. $\frac{75க^3ச^2}{25கச^2}$ 16. $\frac{45x^2yz}{5xyz}$ 17. $\frac{63lm^2n^3}{-21m^2n}$

18. $(24க_3-18க^2+6க)\div(6)$

19. $(3m^3+9m^2n-12mn^2)\div(-3m)$

20. $(15a^4b^3+10a^3b^4-40a^2b^5c)\div(5a^2b^3)$

21. $(-88p^6+121p^4-44p^3+11p^2)\div(-11p^2)$

22. $(12x^5y-28x^4y^2+44x^3y^3-56x^2y^4)\div(4xy)$

---

## அத்தியாயம் 11.

## பிரதிகரணம் தனிச்சமீகரணம் பகுதி க.

### பல இன அப்பியாசம் 1

### பிரதிகரணம்

அக்ஷர இலக்கங்களுக்குப் பதிலாக அவற்றிற்குச் சமமாகத் தரப்பட்ட சாதாரண இலக்கங்களை உபயோகித்துத் தரப்பட்ட தொடரின் விலைகாணும் முறை **பிரதிகரணம்** எனப்படும்.

**உதாரணம் 1.**

$a = 5,\ b = 3,\ c = 1$ ஆயின்

(i) $3a$, (ii) $-2b$, (iii) $ac$ (iv) $3abc$ (v). $\frac{ab}{cb}$

(vi) $a^3c^2$ என்பவற்றின் விலை காண்க.

**செய்கை.**

(i) $3a = 3 \times a = 3 \times 5 = 15$ மறு.

(ii) $-2b = -2 \times b = -2 \times 3 = -6$ ,,

(iii) $ac = a \times c = 5 \times 1 = 5$ ,,

(iv) $3abc = 3 \times a \times b \times c = 3 \times 5 \times 3 \times 1 = 45$ ,,

(v) $\frac{ab}{cb} = \frac{a \times b}{c \times b} = \frac{5 \times 3}{1 \times 3} = 5$ ,,

(vi) $a^2c^2 = a^2 \times c^2 = 5^2 \times 1^2 = 25$ ,,

**உதாரணம் 2.**

க$=5$, ச$=-3$, ம$=6$ ஆயின்

(i) $\frac{16\text{கச}}{4\text{ம}}$, (ii) $\frac{10\text{கம}}{-2\text{கச}}$, (iii) $\sqrt{-10\text{கமச}}$

என்பவற்றின் விலை காண்க.

**செய்கை.**

(i) $\frac{16\text{கச}}{4\text{ம}} = \frac{16 \times 5 \times -3}{4 \times 6} = \frac{-60}{6} = -10$ மறு.

(ii) $\frac{10\text{ம}}{-2\text{கச}} = \frac{10 \times 6}{-2 \times 5 \times -3} = \frac{60}{30} = 2$ ,,

(iii) $\sqrt{-10\text{கமச}} = \sqrt{-10 \times 5 \times 6 \times -3} = \sqrt{900} = 30$ ,,

**உதாரணம் 3.**

$x=3$, $y=4$, $z=0$, $a=-3$ ஆயின்

(i) $x^3y^3z$ (ii) $24x+3y^2$ (iii) $(x+y)(x-y)$

(iv) $(x+y)^2$ (v) $x^2+10xy-z+y^2-a$ என்பவற்றின் விலை காண்க.

**செய்கை.**

(i) $x^3y^3z = 3^3 \times 4^3 \times 0 = 0$ மறு.

(ii) $24x+3y^2 = 24 \times 3 + 3 \times 4 \times 4 = 120$ மறு

(iii) $(x+y)(x-y) = (3+4)(3-4) = 7 \times -1 = -7$ ,,

(iv) $(x+y)^2 = (3+4)^2 = 49$ மறு

(v) $x^2+10xy-z+y^2-a = 9+120-0+16+3 = 148$ ,,

## அப்பியாசம் 6.

$x=2$, $y=3$, $z=1$ ஆயின் பின்வருவனவற்றின் விலை காண்க.

**1.** $2x$ **2.** $x+2$ **3.** $x+y$

**4.** $xy$ **5.** $x^2$ **6.** $x^2y^2$

**7.** $x+y-z$ **8.** $xyz$ **9.** $-10xyz$

**10.** $10x+20y$ **11.** $(xy)^2$ **12.** $\sqrt{6xy}$

13. $\frac{3x}{y}$ 14. $\frac{x}{y-z}$ 15. $\frac{100x+20y}{10x+2y}$

16. $-x^2y^2z^3$ 17. $xz^3$ 18. $14xy^2$

19. $x^3+y^2-z$ 20. $20x^2+5y$

21. $(x+y)^2$ 22. $(x+y)(x+y)$

23. $200x+y^3+6z^2$ 24. $\sqrt{x^2}$

25. $\sqrt{x^3+y^2-z^2}$ 26. $\sqrt{x^2+\sqrt{y^2}}$

27. $(x+y)(x+y)$ 28. $x^2+2xy+y^2$

29. $(x^2-y^2)(x^2+y^2)$ 30. $x^4-y^4$

31. $-2xyz$ 32. $y^2-x^2$

33. $x^2-y^2+10z^2$

$a=3$, $b=5$, $c=0$, $m=2$, $n=-3$ ஆயின் பின்வருவனவற்றின் விலை காண்க.

34. $ab$ 35. $abc$ 36. $ab+bc$

37. $mn$ 38. $n^2$ 39. $2n^3$

40. $n^2$ 41. $5a^2b^2m^2$ 42. $\frac{3bm}{a}$

43. $\frac{ac^2}{mn}$ 44. $\frac{abm}{-bn}$ 45. $\sqrt{a^2+b^2+m}$

46. $(a-n)^2$ 47. $(am+bc)(an+bc)$ 48. $\frac{a^2+b^2+n^2}{bm}$

49. $a=2$, $b=3$ ஆயின்
$(a-b)^2-(5a+b)^2$ இன் விலை காண்க.

50. $x=1\frac{1}{2}$, $y=-2$, $z=3\frac{1}{2}$ ஆயின்
$x^2(y-z)-y(xy-z^2)+z(x-y)^2$ இன் விலை காண்க.

## தனிச்சமீகரணம்

### பகுதி க.

பின்வருங் கணக்கைக் கவனிக்கவும்:

**உதாரணம் 1.**

ஒரு எண்ணுடன் 5 சேரின் 12 ஆகும். அவ்வெண் யாது?

15. $2m+3m=100$

16. $5m-3m=10$

17. $3x=\frac{1}{3}$

18. $\frac{1}{3}x=3$

19. $x+3x+2x=48$

20. $3\times x=72\div 2$

21. $2x+6=20$

22. $5x-2x=12+18$

23. $\frac{6x}{5}=12$

24. $\frac{b}{5}=3\frac{3}{4}$

25. $\frac{5a}{5}=12$

26. $\frac{2}{3}x=6$

27. $2x+7=25$

28. $2x-7=25$

29. $3x-5=5$

30. $3x+5=5$.

---

## அக்ஷர இலக்கப் பிரயோகம்

### பகுதி க.

அறியப்படாத எண்ணின் இடத்திற்கு அக்ஷர எண்ணைப் பிரயோகித்து விடை காணும் முறை முன்னர் உதாரணமொன்றில் விளக்கப் பெற்றுளது. இன்னுமிதனைத் தெளிவாகப் பின் வரும் உதாரணங்களிலிருந்து விளங்கிக் கொள்க.

**உதாரணம் 1.** ஒரு எண்ணின் இருமடங்குடன் 5ஐக் கூட்டின் விடை 35 ஆகும். அவ்வெண் யாது?

**செய்கை.** குறித்த எண் "எ" எனக் கொள்க.

அப்பொழுது 2எ + 5 = 35

∴ 2எ = 35 — 5 = 30

∴ 2எ = 30 எனவே எ = 15.

ஆகவே குறித்த எண் **15** ஆகும்.

**உதாரணம் 2.** ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகளில் $\frac{1}{3}$ பகுதியினர் வெளியே சென்று பின்னர் 5 பிள்ளைகள் வகுப்பில் வந்தபொழுது 29 பிள்ளைகள் இருந்தனர். அவ் வகுப்பிலுள்ள பிள்ளைகள் தொகை என்ன?

**செய்கை.** பிள்ளைகள் தொகை "$x$" எனக் கொள்க.

அப்பொழுது $x - \frac{1}{3}x + 5 = 29$

$\therefore\ x - \frac{1}{3}x = 29 - 5$

$\therefore\ \frac{2}{3}x = 24$, எனவே $x = \frac{24 \times 3}{2} = 36$

ஆகவே வகுப்பில் உள்ள பிள்ளைகள் தொகை **36** எனவரும்.

## அப்பியாசம் 8.

பின்வருவனவற்றைத் தனிச்சமீகரண முறைப்படி செய்க.

**1.** ஒரு எண்ணுடன் 5ஐக் கூட்டியபொழுது மொத்தம் 15 ஆகும். அவ்வெண் யாது?

**2.** ஒரு எண்ணில் 5ஐக் கழித்தபொழுது வித்தியாசம் 15 ஆகும். அவ்வெண் யாது?

**3.** இரு எண்களின் பெருக்குத் தொகை 15. அவற்றுள் ஒன்று 5. மற்ற எண் யாது?

**4.** ஒரு எண்ணின் $\frac{1}{5}$ மடங்கு 15 ஆகும். அவ்வெண் யாது?

**5.** ஒரு எண்ணின் 9 மடங்கு 108 ஆகும். அவ்வெண் யாது?

**6.** ஒரு எண்ணின் 4 மடங்குடன் 7ஐக் கூட்டியபொழுது 43 விடையாய் வந்தது. அவ்வெண் யாது?

**7.** ஒரு எண்ணின் $\frac{1}{4}$ மடங்கிலிருந்து 7ஐக் கழித்தபொழுது விடை 21 ஆகும். அவ்வெண் யாது?

**8.** 10 கத்தரிக்காய்களின் விலை 80 சதம். ஒன்றின் விலையென்ன?

**9.** 10 கத்தரிக்காய் விற்ற பணத்துடன் பையிலுள்ள 28 சதமுஞ் சேர 98 சதமாகும். ஒரு காயின் விலையென்ன?

**10.** 5 தோடம்பழங்களினதும் 7 தோடம்பழங்களினதும் விலை ரூ. 1-08 ஆகும். ஒரு பழத்தின் விலையென்ன?

**11.** இரண்டு அடுத்து வரும் எண்களின் கூட்டுத்தொகை 29. அவ்வெண்களெவை?

12. மூன்று அடுத்து வரும் எண்களின் கூட்டுத்தொகை 66. அவ்வெண்களெவை?

13. ஒரு எண்ணின் மும்மடங்குடன் அவ்வெண்ணின் $\frac{1}{3}$ மடங்குஞ் சேர 20 விடையாய் வரும். அவ்வெண் யாது?

14. தகப்பன் மகனிலும் 26 வயது கூடியவன். இருவருடைய வயது மொத்தம் 52. ஒவ்வொருவருடைய வயதும் என்ன?

15. ஒரு கூடையில் ஒருதொகையான எலுமிச்சம்பழங்களும், இன்னொரு கூடையில் முந்தியதிலும் 50 பழங்கள் கூடவும் உண்டு. முதற் கூடையில் இருந்து மூன்றிலொரு பங்கும் 2ம் கூடையில் இருந்து 80 பழங்களும் விற்றபின் மிகுதி 470 பழங்கள் இருந்தன. ஒவ்வொரு கூடையிலும் முதலில் எத்தனை பழங்கள் இருந்தன?

---

# பல இன அப்பியாசம் 1.

## க

1. $5a + 7a$
2. $4x - 2x$
3. $(+3)(+5)$
4. $(-10) \div (+5)$
5. $x=2, \quad y=3$ ஆயின்
   (i) $2x + 3y$ (ii) $2x - 3y$ என்பவற்றின் விலை காண்க.
6. இரு எண்களின் கூட்டுத்தொகை 30. ஒன்று $x$. மற்ற எண் யாது?

## உ

1. $10x - 2x - 4x$
2. $10$கம $- 3$கம
3. $3x \times 2x^2$
4. $x^5 \div x^2$
5. இரு அடுத்துவரும் எண்களில் ஒன்று $x$. மறு எண் யாது?
6. ஒன்று $a$ சதவீதம் 50 தோடம்பழங்களின் விலை
   (i) எத்தனை சதம்? (ii) எத்தனை ரூபா?

ரு

1. $x + 1$ உடன் $x - 1$ ஐக் கூட்டுக.

2. $x + 1$ இலிருந்து $x - 1$ ஐக் கழிக்குக.

3. $a + b$ ஐ $4$ ஆற் பெருக்குக.

4. $(10x^2) + (-2x)$ எவ்வளவு ?

5. $a=2, b=3, c=1$ ஆயின்

(i) $abc$ (ii) $a^2b^2c^2$ (iii) $\frac{ab}{bc}$ என்பவற்றின் விலே காண்க:

6. ஒருவன் $a+b$ மைல் தூரமுள்ள ஓர் இடத்திற்குப் புறப் பட்டு $2b$ மைல்கள் நடந்தான். இன்னுமவனெவ்வளவு தூரம் நடத்தல் வேண்டும் ?

$a=20$, $b=4$ ஆயின் விடை யாது ?

சு

1. $5a - 3b + 10a - 2b - 6a$ எவ்வளவு ?

2. $4m+2n$ இல் இருந்து $-2m+n$ ஐக் கழிக்குக.

3. $2x^2 - 10x+5$ ஐ $3x$ ஆற் பெருக்குக.

4. $14m^3 - 21m^2+7m$ ஐ $7m$ ஆற் பிரிக்குக.

5. $x=4$, $y= -4$ ஆயின்

(i) $xy$ (ii) $x^2+y^2$ (iii) $x^3 - y^3$ என்பவற்றின் விலே காண்க.

6. $a$ யார் (i) எத்தனை அடி ? (ii) எத்தனை அங்குலம் ? (iii) எத்தனை மைல் ?

எ

1. $a+10b - 5c$ ஐ $-ab$ ஆற் பெருக்குக.

2. $(45a^2b^2+30ab^3 - 105b^4) \div (-15b)$

3. $S=70$, $T=10$, $V=0$ ஆயின்

(i) $STV$ (ii) $\frac{V}{ST}$ (iii) $S^3 + T^3 + V^3$

என்பவற்றின் விலை காண்க.

4. ஒரு குதிரை ஒரு மணித்தியாலத்தில் $m$ மைல்கள் ஓடும். அது

(i) ஒரு நிமிடத்தில் எத்தனை யார் போகும்?

(ii) $b$ மைல் போக எவ்வளவு நேரஞ்செல்லும்?

(iii) $m=15, b=7\frac{1}{2}$ ஆயின் விடைகள் யாவை?

5. ஒரு எண்ணின் 5 மடங்குடன் 7 ஐக் கூட்டினால் 77 விடையாய் வரும். அவ்வெண்ணின் மும்மடங்குடன் 3 ஐக் கூட்டினால் விடை யாது?

---

# அத்தியாயம் 111.

## நான்கு விதி—யோசனைக் கணக்குகள்.

## கூட்டல் (பகுதி-உ)

**உதாரணம் 1.** கூட்டுக.

$x+y;\ x+4y;\ 2x-y$

$$\begin{array}{r} x+y \\ x+4y \\ 2x-y \\ \hline \end{array}$$

கூட்டினால் $4x+4y$ மறு.

ஓர் வரியில் முதலாவதாக வரும் இலக்கம் கூட்டல் அடையாளம் (+) உடையதாயின் நாம் அந்த இலக்கத்தின்முன் அவ்வடையாளத்தைக் கொள்ளவேண்டியதில்லை. இக்காரணம் பற்றியே $4x$ இன்முன் அவ்வடையாளம் போடப்படவில்லை.

**உதாரணம் 2.** கூட்டுக.

1. $x+y+z,\ x-y+z,\ -x-y-z.$
2. $14$க$+2$ச$-4$ம, $-$ச$+10$ம, $-20$க$-25$ம.

செய்கை.

1.
$$\begin{array}{r} x + y + z \\ x - y + z \\ -x - y - z \\ \hline x - y + z \end{array}$$ மறு.

2.
$$\begin{array}{r} 14\text{க} + 2\text{ச} - 4\text{ம} \\ - \text{ச} + 10\text{ம} \\ -20\text{க} \quad - 25\text{ம} \\ \hline -6\text{க} + \text{ச} - 19\text{ம}. \end{array}$$ மறு.

உதாரணம் 3. கூட்டுத்தொகை காண்க.

$$-a^2 - 3b + 5, \quad 3a^2 - 6b + 1, \quad -2a^2 - 10b + 9.$$

செய்கை.

$$\begin{array}{r} -a^2 - 3b + 5 \\ 3a^2 - 6b + 1 \\ -2a^2 - 10b + 9 \\ \hline -19b + 15 \end{array}$$

கூட்டின் $-19b + 15$ மறு.

உதாரணம் 4. ஒழுங்குபடுத்திக் கூட்டுக.

1. $ax + by + z, \; 3z - 4by + 14ax, \; 10by - 3ax.$
2. $\frac{1}{2}x + \frac{1}{4}y + 2, \; 5 - \frac{1}{2}y + \frac{3}{4}x, \; 1\frac{3}{4}y - \frac{1}{4}x - 6.$

(கூட்டல் கழித்தற் கணக்குகளில் ஒழுங்குபடுத்தலாவது இன இலக்கங்கள் ஒன்றன் கீழ் ஒன்று வரும்படி நிரைப் படுத்தலாகும்.)

1.
$$\begin{array}{r} ax + by + z \\ 14ax - 4by + 3z \\ -3ax + 10by \quad \\ \hline 12ax + 7by + 4z \end{array}$$ மறு.

2.
$$\begin{array}{r} \frac{1}{2}x + \frac{1}{4}y + 2 \\ \frac{3}{4}x - \frac{1}{2}y + 5 \\ -\frac{1}{4}x + 1\frac{3}{4}y - 6 \\ \hline x + 1\frac{1}{2}y + 1 \end{array}$$ மறு.

## அப்பியாசம் 9.

கூட்டுக.

1. $a + b, a - b$
2. $a - 1, a - 4$
3. $2x + y, x + 2y$
4. $xy + z, xy - 2z$
5. $ax + by, ax + 5$
6. $10mn - n, 6mn + n$
7. $a + 1, 5a + 3, 2a + 20$
8. க $- 1$, 5க $- 3$, $-2$க $- 20$

9. $15m - 10n, \ 3m + n, 4m - 4n$

10. $x^3 + 10, \ \ 7x^3 - 20, \ \ -10x^3 - 10$

11. க + ப + ம, க − ப + ம, − க + ப − ம

12. $4a + 2c + 2f, -3a + 4c - f, a - 5c + 10f$

13. $x + y, 2x - 4y, 5x + 100$

14. $20l + 10m - 4n, -10l - 4m + n, l + m + 3n$

15. 20க + 10ச + 5, 5ச − 25 + 10க, 10 − 5க + 5ச.

கூட்டுத்தொகை காண்க.

16. 4க² + 2க − 1, − 16க² + 10க − 4, 7க² − 5க + 11

17. $4a^2 - ab + 10b^2, 13a^2 + 10ab - 2b^2, -5a^2 - 7ab - 8b^2$

18. $ax + 10by - 11z, 2ax - 13by, 36y - z$

19. $x^3 + y^2 + z, 4x^3 - 2y^2 - z, 13x^3 + 20y^2 - 7z$

20. $a^2x^2 + b^2y^2 - 10, a^2x^2 - b^2y^2 + 3, 10a^2x^2 + 25$

21. $2 - 4n + n \ , 5 + 10n + 3n^2, -7 + 6n + 9n^2$

22. $abc + xyz + 10, -4abc + 2xyz, -8xyz + 17$

23. $a^4 + a^2b^2 + b^4, 12a^4 + 16a^2b^2 - 5b^4, 24a^4 - a^2b^2 + 3b^4$

24. $\frac{1}{3}$க + $\frac{2}{3}$ம + 3, $\frac{2}{3}$க + $\frac{1}{3}$ம − 6, 4க + 2ம − 2

25. $\frac{1}{2}n + m + \frac{1}{3}, \frac{3}{4}n - 5m + 1\frac{2}{3}, 16m + \frac{2}{3}$

ஒழுங்குபடுத்திக் கூட்டுக.

26. $a - 4b + c, 2b - 10c + 2a, -c - 14a + 3b$

27. கம + 2சப − 3ல, 4ல − 2கம, − 14ல + 21கம − சப

28. $10x^2 + 5x + 1, 50x^2 + 10 - 20x, 60 - 25x^2 + 15x$

29. $7 - 2n + 3n^2, -2 + n^3 + n, 4n^3 - 13n^2 - n$

30. $x^4 + 3x^3 - 2x^2 - x, 12x^2 - 2x^4 + 15x, x + x^2 + 16x^3$

# கழித்தல் (பகுதி-உ)

**உதாரணம் 1.**

8க $+$ 6ச — ம இல் இருந்து 4க — 3ச $+$ 2ம வைக்கழி.

**செய்கை.**

8க $+$ 6ச — ம
4க—3ச $+$ 2ம
கழிப்பின் 4க $+$ 9ச—3ம மறு.

**உதாரணம் 2.**

$14\,n^2 - 11\,n^3 + 3n$ ஐ $10\,n^3 + 4\,n^2 - n$ இல் இருந்து ஒழுங்குபடுத்திக் கழி.

175 ஐ 230 **இல் இருந்து கழி** என்றால் 230 ஐ மேலே எழுதிக் கழித்தல் வேண்டும்.

இவ்வாறு மேற்படி கணக்கிலும் இரண்டாம் பகுதி மேலே வரல்வேண்டும்.

**செய்கை.**

$$\begin{array}{r} 10n^3 + 4n^2 - n \\ -11n^3 + 14n^2 + 3n \\ \hline 21n^3 - 10n^2 - 4n \end{array}$$

கழிப்பின் $21n^3 - 10n^2 - 4n$ மறு.

**உதாரணம் 3.**

$14x^2 + 10y - 3$ ஐ $x^3$ இல் இருந்து கழி.

**செய்கை.**

$$\begin{array}{r} x^3 \qquad\qquad\qquad \\ 14x^2 + 10y - 3 \\ \hline x^3 - 14x^2 - 10y + 3. \end{array}$$

கழிப்பின் $x^3 - 14x^2 - 10y + 3.$ மறு.

**உதாரணம் 4.**

$x^3 + y^3$ இல் இருந்து $x^3 - x^2y + 3xy^2 + y^3$ ஐக் கழி.

$$\begin{array}{r} x^3 \qquad\qquad\qquad + y^3 \\ x^3 - x^2y + 3xy^2 + y^3 \\ \hline x^2y - 3xy^2. \end{array}$$

கழிப்பின் $x^2y - 3xy^2.$ மறு.

## அப்பியாசம் 10.

கழிக்குக :

1. $x - y + z$ இல் இருந்து $x + y - z$ ஐ.
2. க + 3ச — ப ,, 3க—10ச—2ப ,,
3. $2a + 3b - c$ ,, $a - 5b + c$ ,,
4. $2x^2 + 3x - 1$ ,, $x^2 - 3x + 15$ ,,
5. $x - y + 3z$ ,, $x - 4y + 10z$ ,,
6. 20க² + 10கம + 4ம² ஐ 30க² + 2கம —3ம² இல் இருந்து
7. $x^4 + y^4$ ஐ $x^4 - y^4$ இல் இருந்து
8. $m^2 + m + 1$ ,, $m^2$ ,,
9. $4x^2 + 2x - 3$ ,, $10x^2 - 1$ ,,
10. $10xy + 14yz$ ,, $3x^2$ ,,
11. $4x^2 + 3xy - 2y^2$ ,, $x^2 + xy - y^2$ ,,
12. $n^3 - 10n + 5$ ,, $4n^2 - 3 + 2n^3$ ,,
13. $3a - 2b + c - 3d$ இல் இருந்து $2a - b - c + d$ ஐக் கழிக்குக.
14. $3a^2 + ax - a^3$ இல் இருந்து $a^2 - ax - a^3 + bx$ ஐக் ,,
15. $6b^2 - 2x^3 + ax$ ,, ,, $3x^3 - 2ax + 4bx^2$ ஐக் ,,

---

## யோசனைக் கணக்குகள் 1.

உதாரணம்.

$5x^2 + 3x - 1$ ஐ $2x^3$ இல் இருந்து கழித்து வரும் மிச்சத்துடன் $2x^2 + 3x - 1$ ஐக் கூட்டுக.

செய்கை. $2x^3$

$5x^2 + 3x - 1$

கழிப்பின் $2x^3 - 5x^2 - 3x + 1$

$2x^2 + 3x - 1$

கூட்டின் $2x^3 - 3x^2$ மறு.

## அப்பியாசம் 11

1. (i) 312 இனதும் 238 இனதும் கூட்டுத் தொகையை 750 இல் இருந்து கழிக்குக.

   (ii) $20x^2+10x-y$ இனதும் $4x-2x-4y$ இனதும் கூட்டுத்தொகையை $100x^2-y$ இல் இருந்து கழிக்குக.

2. $க^4$ இனதும் $க^3$ இனதும் கூட்டுத்தொகையை $4க^3$ இல் இருந்து கழிக்குக.

3. (i) 548 இல் இருந்து 300 இனதும் 120 இனதும் வித்தியாசத்தைக் கழிக்குக.

   (ii) $10x^3+100$ இல் இருந்து $14x^3-75$ இனதும் $8x^3-5$ இனதும் வித்தியாசத்தைக் கழிக்குக.

4. $10x^3$ இல் இருந்து $x^3+x^2-10x$ இனதும் $4x^2+14x$ இனதும் கூட்டுத்தொகையைக் கழிக்குக.

5. $3n^2+2$ இல் இருந்து $2n^2+4n-3$ ஐக் கழித்துவரும் மிகுதியுடன் $3n^2-6n+5$ ஐக் கூட்டுக.

6. ஒரு பாடசாலையிலுள்ள பிள்ளைகள் மொத்தம் $2x$. அவர்களுள் $y$ தொகையினர் பெண்களாயின் ஆண்களெத்தனை?

7. பூபாலன் $5x+20$ மாபிள்களுடன் விளையாடத் தொடங்கி ஈற்றில் $10x-4$ மாபிள்கள் வைத்திருந்தான். அவன் வென்ற மாபிள்கள் எத்தனை? $x=12$ ஆனால் மறுமொழி யாது?

8. ஒரு தோப்பில் 100 மாமரங்களும், $10x+15$ பலாமரங்களும், $8x-3$ தென்னைகளும் உண்டு. தென்னை, பலா முதலியவற்றின் கூட்டுத்தொகை மாமரங்களிலும் பார்க்க எவ்வளவு கூட? $x=6$ எனின் அத்தோப்பிலுள்ள மரங்களெத்தனை?

9. ஒரு புகை வண்டியில் $4x+2y-z$ பிரயாணிகளுண்டு. முதல் வகுப்பு வண்டியில் $x+y+z$ பிரயாணிகளும், மூன்றும் வகுப்பில் $2x-y-2z$ பிரயாணிகளும் இருந்தால் இரண்டாம் வகுப்பு வண்டியிலுள்ள பிரயாணிகளெத்தனை?

10. ஒரு புகைவண்டியில் முதலாம் வகுப்பில் $x+y$ பிரயாணிகளும், இரண்டாம் வகுப்பில் $2x-y$ பிரயாணிகளும், மூன்றும் வகுப்பில் $4x+2y$ பிரயாணிகளும் இருந்தால் அவ்வண்டியிலுள்ள பிரயாணிகள் மொத்தங்காண்க.

11. ஒரு கிராமத்தில் $2x-5y-2$ ஆண்களும், $x+10y+8$ பெண்களும், $14x-20$ பிள்ளைகளும் உளர். அக்கிராமத்தில் வசிக்கும் ஜனத்தொகை காண்க. $x=100$, $y=5$ எனின் மறுமொழி யாது?

12. $\mathbf{A}=m+10n+5$; $\mathbf{B}=5m+3n-15$;

$\mathbf{C}=2m-3n$ ஆயின் $\mathbf{A}+\mathbf{B}-\mathbf{C}$ எவ்வளவு?

13. ஒரு சமகோணக் கண்ணுடித்துண்டு $a$ அடி நீளமும் அந்நீளத்திலும் $b$ அடி குறைந்த அகலமுமுடையதாயின் அதன் சுற்றளவென்ன?

$a=5$, $b=3$, ஆயின் விடை யாது?

14. ஒரு சாக்கிலுள்ள 2 அந்தர் சீனியிலிருந்து $x$ இருத்தலும் $y$ இருத்தலும் விற்றபின் மிகுதி எவ்வளவு?

$x=100$, $y=28$ ஆயின் விடை யாது?

15. ஒரு வியாபாரி 10 குரோஸ் கொப்பிகள் வாங்கி $x+y$ டசின் கொப்பிகள் விற்றபின் மீதி எத்தனை டசின்?

$x=25$, $y=36$ ஆயின் விடை யாது?

---

## பெருக்கல் (பகுதி-உ)

**உதாரணம் 1.**

க + ம வை க — ம வாற் பெருக்குக.

**செய்கை.**

| | | |
|---|---|---|
| | க + ம | |
| | க — ம | |
| க ஆற் பெருக்கினல் | $க^2$ + கம | |
| —ம ,, ,, | — கம — $ம^2$ | |
| கூட்டினல் | $க^2$ — $ம^2$ | மறு. |

$(a+b)$ ஐ $(a-b)$ ஆற் பெருக்குக என்றுலும் $(a+b)\ (a-b)$ என்றுலும் பொருள் ஒன்றே.

**உதாரணம் 2.** **விடைகாண்க.**

$(x^2 + 2x - 3)(x + 1)$

**செய்கை.**

$$\begin{array}{l} x^2 + 2x - 3 \\ x + 1 \\ \hline x^3 + 2x^2 - 3x \\ \qquad x^2 + 2x - 3 \\ \hline x^3 + 3x^2 - x - 3 \end{array}$$ மறு.

**உதாரணம் 3.**

$a^2 + ab + b^2$ ஐ $a - b$ ஆற் பெருக்குக.

**செய்கை.**

$$\begin{array}{l} a^2 + ab + b^2 \\ a - b \\ \hline a^3 + a^2b + ab^2 \\ \qquad - a^2b - ab^2 - b^3 \\ \hline a^3 \qquad\qquad\qquad - b^3 \end{array}$$ மறு.

**உதாரணம் 4.**

$10x + y + 7z$ ஐ $2x - y$ ஆற் பெருக்குக.

**செய்கை.**

$$\begin{array}{l} 10x + y - 7z \\ 2x - y \\ \hline \end{array}$$

$2x$ ஆற் பெருக்கின் $20x^2 + 2xy - 14xz$

$-y$ ,, $-10xy \qquad -y^2 + 7yz$

கூட்டின் $20x^2 - 8xy - 14xz - y^2 + 7yz$ மறு.

**உதாரணம் 5.**

$2x^3 - 3x + 7 + 6x^2$ ஐ $-3x^2 - x + x^5 - 5$ ஆற் பெருக்குக.

மேற்படி இரு தொகைகளையும் நிரைப்படுத்தினல் ஒன்று $2x^3 + 6x^2 - 3x + 7$ எனவும், மற்றது $x^5 - 3x^2 - x - 5$ எனவும் வரும். இவ்வாறு நிரைப்படுத்தியே **செய்கையை** ஆரம்பித்தல் வேண்டும்.

செய்கை.

$$\begin{array}{l} 2x^3 + 6x^2 - 3x + 7 \\ x^3 - 3x^2 - x - 5 \\ \hline 2x^6 + 6x^5 - 3x^4 + 7x^3 \\ \quad - 6x^5 - 18x^4 + 9x^3 - 21x^2 \\ \quad\quad - 2x^4 - 6x^3 + 3x^2 - 7x \\ \quad\quad\quad - 10x^3 - 30x^2 + 15x - 35. \\ \hline 2x^6 - 23x^4 - 48x^2 + 8x - 35. \end{array}$$

## அப்பியாசம் 12.

1. க + 1 ஐ க + 1 ஆற் பெருக்குக.
2. ம — 1 ,, ம — 1 ,,
3. ச + 2 ,, ச — 2 ,,
4. $n-10$ ,, $n+10$ ,,
5. $-x+3$ ,, $x-3$ ,,
6. $a^2+b^2$ ,, $a+b$ ,,
7. $a^2+2b$ ,, $a^2-2b$ ,,
8. க + ம ,, க + ம ,,
9. $10m-4n$ ,, $2m-n$ ,,
10. $x^2+2xy$ ,, $3x-2y$ ,,

விடை காண்க.

11. $(a-b)(a+b)$ =
12. $(a^5+2a)(a^2-2a)$ =
13. (க + 10ம) (க + 10ம) =
14. $(ac-2)(ac-1)$ =
15. $(4m-n)(2m+3n)$ =
16. (2ச + 3ப) (2ச + 3ப) =

பெருக்குக.

17. க + ச — ம ஐ க — ச + ம ஆல்
18. $2x+y-z$ ,, $x-y-z$ ,,
19. $a^3+10a^2-5a$ ,, $a^2+5a-3$ ,,
20. $4x^2-2xy+y^2$ ,, $x^2+xy-y^2$ ,,
21. $15m+14n-10$ ,, $-5m-2n+1$ ,,

பெருக்குத்தொகை காண்க.

22. $a^2+b^2$ இனதும் $a^2-b^2$ இனதும்
23. $க^2-ம^2$ ,, $க+ம$ ,,
24. $x^2-y^2$ ,, $x^2-y^2$ ,,
25. $a^2+ab+b^2$ ,, $a-b$ ,,
26. $a^2-ab+b^2$ ,, $a+b$ ,,
27. $x^2+xy+y^2$ ,, $x+y$ ,,
28. $x^2+x+1$ ,, $x-1$ ,,

பெருக்குத்தொகை காண்க.

29. $n^2+n-1$ இனதும் $2n+1$ இனதும்
30. $3க^2+5ம-2$ ,, $4ம-3$ ,,
31. $1-8m+4m^2$ ,, $4-2m$ ,,
32. $x^4+x^2y^2+y^4$ ,, $x^2-y^2$ ,,

பெருக்குக.

(உதாரணம் 5 போல் ஒழுங்குபடுத்தவும்.)

33. $m^3+13m-4m^2$ ஐ $5+3m^2-2m$ ஆல்
34. $a^3+3a-a^2-2$ ,, $a^3+5+4a$ ,,
35. $n^2+n-14n^2+n^4+5n^3$ ,, $3n^2-5n+7$ ,,
36. $க^3+க-3+10க^2$ ,, $க^3+10க^2-க$ ,,
37. $x^2+xy+10-y^2$ ,, $2-y+x$ ,,

பெருக்குக.

38. $2x^3+6x^2-3x+7$ ஐ $x^3-3x^2-x+5$ ஆல்
39. $2x^3+3x^2-x+2$ ,, $7x^2+x+2$ ,,
40. $x^2-xu+2y^2$ ,, $x^2+xy-2y^2$ ,,

# பிரித்தல் (பகுதி-உ)

உதாரணம் 1.

1. $672 \div 21$.

32 மறு.

(1)
$$\begin{array}{r|l} 21) & 672 \\ & 63 \\ \hline & 42 \\ & 42 \\ \hline \end{array}$$

2. $(x^2+3x+2) \div (x+1)$

$x+2$ மறு.

(2)
$$\begin{array}{rl} x+1) & x^2+3x+2 \\ & x^2+x \\ \hline \text{கழித்தால்} & 2x+2 \\ & 2x+2 \\ \hline \end{array}$$

1. இக்கணக்கில் பிரிக்கப்படும் எண்ணின் முதல் இலக்கமாகிய 6 இல் பிரிக்கும் எண்ணின் முதல் இலக்கமாகிய 2 எத்தனை முறை அடங்குமென ஆராய்கின்றோம். 6 இல் 2 மூன்று முறை அடங்குமென அறிந்தபின் அந்த 3 ஆல் பிரிக்கும் தொகையாகிய 21ஐப் பெருக்கி அப்பெருக்குத் தொகையாகிய 63 ஐ 67 இல் இருந்து கழிக்கிறோம். பின் 2 ஐ இறக்கி முன்செய்தது போலவே செய்கிறோம்.

2. மேற்படி உதாரணத்தில் எடுத்துக்கொண்ட மாதிரியே இரண்டாம் கணக்கிலும் $+x^2$ இல் $+x$ எத்தனைமுறை அடங்குமென அறிதல்வேண்டும். $x$ முறை அடங்கும். பின் அவ் $x$ ஆல் $x+1$ ஐப் பெருக்கி அப்பெருக்குத் தொகையை $x^2+3x$ இல் இருந்து கழித்தல் வேண்டும். பின்பு $+2$ ஐ இறக்கி முன்செய்ததுபோலவே செய்யவும்.

**உதாரணம் 2.**

$9\text{க}^2 + 27\text{க}^3 - 10 - 3\text{க}$ வை $3\text{க} - 2$ ஆற் பிரிக்கவும்.

$9\text{க}^2 + 27\text{க}^3 - 10 - 3\text{க} = 27\text{க}^3 + 9\text{க}^2 + 3\text{க} - 10$. இவ்வாறு நிரைப்படுத்திய பின்பே நாம் மேற்படி கணக்கைச் செய்தல் வேண்டும்.

**செய்கை.**

$9\text{க}^2 + 9\text{க} + 5$ மறு.

$3\text{க} - 2)\ 27\text{க}^3 + 9\text{க}^2 - 3\text{க} - 10$

$27\text{க}^3 - 18\text{க}^2$

கழித்தால் $27\text{க}^2 - 3\text{க}$

$27\text{க}^2 - 18\text{க}$

கழித்தால் $15\text{க} - 10$

$15\text{க} - 10$

**உதாரணம் 3.**

$a^3 + b^3$ ஐ $a + b$ ஆற் பிரிக்கவும்

**செய்கை.**

$a^2 - ab + b^2$ மறு.

$a + b)\ a^3 \quad + b^3$

$a^3 + a^2b$

$-a^2b \quad + b^3$

$-a^2b - ab^2$

$+ ab^2 + b^3$

$+ ab^2 + b^3$

உதாரணம் 4.

$$(x^6 + x^4 + 8x^3 - 12x^2 - 4x + 18) \div (x^3 - 3x + 3)$$

$$\begin{array}{r|l} & x^3 + 4x + 5 \quad \text{மறு.} \\ \hline x^3 - 3x + 3 & x^6 + x^4 + 8x^3 - 12x^2 - 4x + 18 \\ & x^6 - 3x^4 + 3x^3 \\ \hline & 4x^4 + 5x^3 - 12x^2 - 4x \\ & 4x^4 \qquad - 12x^2 + 12x \\ \hline & 5x^3 \qquad - 16x + 18 \\ & 5x^3 \qquad - 15x + 15 \\ \hline & -x + 3 \text{ மிச்சம்} \end{array}$$

## அப்பியாசம் 13.

**பிரிக்குக.**

1. $ம^2 + 2ம + 1$ ஐ $ம + 1$ ஆல்.
2. $a^2 - 2a + 1$ ,, $a - 1$ ,,
3. $x^2 + 2xy + y^2$ ,, $x + y$ ,,
4. $m^2 - 2mn + n^2$ ,, $m - n$ ,,
5. $3a^2 - 10a + 3$ ,, $3a + 1$ ,,
6. $n^2 - 15n + 54 \div n - 6$

**பிரிக்குக.**

7. $க^3 - க^2 + க + 3 \div க + 1.$
8. $20c^2 - 9cd - 20d^2 \div 4c - 5d.$
9. $a^3 + 3a^2 - 13a - 15 \div a - 3.$
10. $6x^3 - 19x^2 + 25 \div 2x - 5.$

(உதாரணம் 2 போல் ஒழுங்குபடுத்திப் பிரிக்கவும்)

11. $15க^4 + 12க^2 - 32 + 24க - 29க^3$ ஐ $3க - 4$ ஆல்
12. $-8x^2 + 14x^4 + 6x^3 - 8x + 5x^5$ ,, $x^2 + 2x$ ,,
13. $n + 8n^3 - 12n^2 + 15 + n^4 - 3n$ ,, $n - 3n + 3$ ஆல்.
14. $க^2 - 1$ ஐ $க + 1$ ஆற் பிரி
15. $x^2 - y^2$ ,, $x - y$ ,,
16. $x^4 - 1$ ,, $x^2 + 1$ ,,

17. $x^3 + y^3$ ஐ $x + y$ ஆற் பிரி
18. $n^3 - m3$ ,, $n - m$ ,,
19. $16m^4 - 4n^2$ ,, $4m^2 + 2n$ ,,
20. $x^6 + 64$ ,, $x^2 + 4$ ,,
21. $x^3 + y^6$ ,, $x + y^2$ ,,
22. $8\text{க}^3 - \text{ம}^3$ ,, $2\text{க} - \text{ம}$ ,,
23. $27a^6 + 8y^3$ ,, $3a^2 + 2y$ ,,
24. $(8a^3 - 48a^2b + 96ab^2 - 37b^3) \div (2a - b)$.
25. $(3x^4 + 4x^3 + 5x^2 + 2x + 6) \div (3x^2 - 2x + 3)$
26. $x^6 - 31x + 30$ ஐ $x^2 - 3x - 2$ ஆற் பிரிக்குக.
27. $4x^5 - x^8 - 32x + 9$ ஐ $2x^2 + 3x - 1$ ,,
28. $6x^5 - x^4 - 4x^2 - 16$ ,, $3x^2 - 2x + 4$ ,,
29. $27x^5 - 18x^4 - 42x^3 - 16$ ஐ $9x^2 - 6x + 4$ ,,
30. $12x^5 - 47x^4 + 26x^3 - 14x - 15$ ஐ $3x^2 - 8x - 5$,,

---

## யோசனைக் கணக்குகள் 11.

**உதாரணம் 1.** ஒரு பழம் $x$ சதவீதம் 4 பழங்களின் விலை என்ன?

**செய்கை.** ஒரு பழத்தின் விலை $= x$ சதம்

$\therefore$ 4 ,, ,, $= 4 \times x = 4x$ சதம்

அல்லது $\frac{4}{100}x$ ரூபா மறு.

**உதாரணம் 2.**

ஒரு ஆடு $x$ ரூபா வீதம் $y$ ஆடுகளின் விலை என்ன?

(*ii*) $x = 10$, $y = 14$ ஆயின் மறுமொழி யாது?

**செய்கை.** ஒரு ஆட்டின் விலை $x$ ரூபா.

$\therefore$ $y$ ஆடுகளின் விலை $= x \times y = xy$ ரூபா மறு.

(*ii*) $x = 10$, $y = 14$ ஆயின் $xy = 14 \times 10 = 140$ ரூபா மறு

**உதாரணம் 3.**

ஒரு பேனை $a$ சதவீதம் $b$ சதங்களுக்கு எத்தனை பேனை வாங்கலாம்?

(*ii*) $x$ ரூபாய்களுக்கு எத்தனை பேனை வாங்கலாம்?

**செய்கை.** $a$ சதத்திற்கு 1 பேனை வாங்கலாம்.

$\therefore\ b$ ,, $b \div a = \frac{a}{b}$ பேனை வாங்கலாம். மறு.

$(ii)$ $x$ ரூபா $= 100x$ சதம்.

$\therefore$ $100\,x$ சதத்திற்கு $= \frac{100\,x}{a}$ பேனை. மறு.

**உதாரணம் 4.**

ஓர் அறையின் நீளம் $2x + 2$ அடி, அகலம் $2x - 1$ அடி $(i)$ அதன் பரப்பென்ன? $(ii)$ $x = 5$ ஆனல் மறுமொழி யாது?

**செய்கை.**

$(i)$ நீளம் $2x + 2$ அடி, அகலம் $2x - 1$ அடி.

$\therefore$ பரப்பு $= (2x + 2)(2x - 1)$

$= 4x^2 + 2x - 2$ சதுர அடி.

அல்லது $\frac{4x^2 + 2x - 2}{9}$ சதுர யார். மறு.

## அப்பியாசம் 14.

1. ஒரு எண் $14a$, மற்றது $2b$. இரண்டினதும் பெருக்குத் தொகை யாது?

2. (i) இரு எண்களின் பெருக்குத் தொகை 75. ஒன்று 15. மற்றது யாது?

   (ii) இரு எண்களின் பெருக்குத் தொகை $n$. ஒன்று $m$. மற்றது யாது?

3. இரு எண்களின் பெருக்குத் தொகை $60x^2$. ஒரு எண் $5x$. மறு எண் யாது?

4. ஒரு நாளில் $a$ சதம் உழைக்குமொருவன் ஒரு வருடத்தில் எத்தனை ரூபா உழைப்பான்?

5. ஒரு கூடையில் $x + y$ பழங்கள் வீதம் 12 கூடைகளில் எத்தனை பழங்கள்? $x = 15, y = 5$ ஆயின் விடையாது?

6. ஒரு அறையின் நீளம் $x$ அடி. அதன் அகலம் நீளத்திலும் 8 அடி குறைவாயின் அறையின் சுற்றளவையும் தளத்தின் பரப்பையுங் காண்க.

7. நீள்சதுர வடிவமுள்ள ஒரு காகிதத்துண்டு $3x$ அங். அகலமும் $4x$ அங். நீளமும் உடையதாயின் (i) அதன் சுற்றளவென்ன? (ii) பரப்பென்ன?

8. ஒரு சமகோணக் கண்ணாடித் துண்டு $a$ அடி நீளமும் அந்நீளத்திலும் $b$ அடி குறைந்த அகலமும் உடையதாயின் (i) அதன் சுற்றளவென்ன? (ii) பரப்பென்ன?

9. ஒரு வயலின் நீளம் $4x$ யார். அகலம் $2x + 3$ அடி. (i) அதன் பரப்பென்ன? (ii) சுற்றளவென்ன? (iii) $x = 40$ ஆயின் விடைகளென்ன?

10. மூடியுள்ள ஒரு மரப்பெட்டி $2a$ அங். நீளம், $a$ அங். அகலம், $b$ அங். உயரங்கொண்டது. அதன் வெளிப்பக்கங்களின் முழுப்பரப்பையுங் காண்க?

11. ஒரு புஸ்தகம் $m$ ரூபா வீதம் $n$ ரூபாய்க்கு எத்தனை புஸ்தகம் வாங்கலாம்? $m = 2, n = 50$ ஆனால் மறுமொழி யாது?

12. ஒரு பிள்ளைக்கு நாளொன்றுக்கு $x$ சதவீதம் 25 பிள்ளைகளுக்கு 2 வாரத்திற்கு எவ்வளவு ரூபா கொடுத்தல் வேண்டும்? $x = 10$ ஆனால் மறுமொழி யாது?

13. ஒருவன் 22 மைல் தூரமுள்ள ஓர் இடத்திற்குப் புறப்பட்டு மணித்தியாலம் $a$ மைல் வீதம் $b$ மணித்தியாலங்கள் நடந்தான். இன்னும் எவ்வளவு தூரம் உளது? $a = 3, b = 5$ ஆனால் மறுமொழி யாது?

14. ஒரு தோடம்பழம் $x$ சதவீதம் 15 தோடம்பழங்கள் கொடுத்து ஒரு டசின் அப்பிள் பழங்கள் வாங்கினேன். ஒரு அப்பிள் பழத்தின் விலை யாது? $x = 5$ ஆனால் மறுமொழி யாது?

15. ஓர் தகரம் $2x$ அடி நீளம், $x$ அடி அகலம், $3x—2$ அடி உயரம் உடையது. அது எத்தனை கன அடி தண்ணீர் கொள்ளும்?

16. ஒரு குரோஸ் பேனை விலை $x$ சிலிங் ஆயின் ஒரு பேனையின் விலை எத்தனை பென்ஸ்? ஒரு டசின் பேனையின் விலையென்ன? (குரோஸ் = 144).

# அத்தியாயம் IV

## அடைப்புக்குறி நீக்கம்—தனிச்சமீகரணம் II முதலியன.

## அடைப்புக்குறி நீக்கம் (பகுதி - க)

அடைப்புக் குறிகளுள் அடைபட்டிருக்கும் இலக்கங்கள் ஒரு தொகையாகக் கருதப்படல் வேண்டும். இதை உணர்த்துவதற்கு அடைப்புக்குறிகள் உபயோகிக்கப்படுகின்றன. ( ) இஃது சாமானிய அடைப்புக்குறி எனப்படும்.

$8+(15+3)$ என்பதன் பொருள் 8 உடன் 15 இனதும் 3 இனதும் கூட்டுத் தொகையைக் கூட்டுக என்பதே. 15 ஐயும் 3 ஐயும் கூட்டியபின் 8 உடன் கூட்டினாலும், அன்றேல் 15ஐயும் 3ஐயும் தனித்தனி 8 உடன் கூட்டினாலும் வரும் மறுமொழி ஒன்றே.

$$\therefore \quad 8+(15+3) = 8+18$$

அல்லது $$8+(15+3) = 8+15+3$$

இவ்வாறே (i) க$+$(ச$+$ம) $=$ க$+$ச$+$ம

(ii) $x+(y-z) = x+y-z$

அடைப்புக் குறிகளுக்கு முன்னால் + இருக்குமாயின் நாம் அடைப்புக் குறிகளுக்குளிருக்கும் இலக்கங்களின் அடையாளங்களை ஒரு மாற்றமுஞ் செய்யாமல் அந்த அடைப்புக் குறிகளை நீக்கி விடலாம் என்பதை மேற்காட்டிய உதாரணங்கள் விளக்குகின்றன.

$$\therefore x+y-z+(a-b+c) = x+y-z+a-b+c$$ மறு.

$15-(5+3)$ என்பது 5 இனதும் 3 இனதும் கூட்டுத் தொகையை 15 இல் இருந்து கழி எனக் குறிக்கின்றது. 5 ஐயும் 3 ஐயும் கூட்டியபின் 15இல் இருந்து கழித்தாலும் அல்லது 15 இல் இருந்து 5ஐக் கழித்து வரும் மிச்சத்திலிருந்து 3 ஐக் கழித்தாலும் மறுமொழி ஒன்றே.

ஆகையால் $15-(5+3) = 15-8$

அல்லது $15-(5+3) = 15-5-3$

இவ்வாறே (i) $x-(y+z) = x-y-z$

(ii) $a-(b-c) = a-b+c$.

நாம் ஓர் அடைப்புக்குறியை நீக்கும்பொழுது அதற்குமுன் —அடையாளம் இருக்குமாயின் அப்போது அடைப்புக் குறிக்குள் இருக்கும் இலக்கங்களின் அடையாளங்களை மாற்றியே (அதாவது + ஐ — ஆகவும், — ஐ + ஆகவும் மாற்றியே) மேற்படி அடைப்புக் குறியை நீக்கல் வேண்டும் என்பதை முந்திய உதாரணம் விளக்குகின்றது.

$$\therefore \quad x-y+z-(a+b-c)$$
$$=x-y+z-(+a+b-c)$$
$$=x-y+z-a-b+c \quad \text{மறு.}$$

$2a+3a\ (a+2b-c)$ என்னும் தொடரிலுள்ள அடைப்புக்குறியை நீக்கின் $+3a$ ஆல் அடைபட்டிருக்கும் ஒவ்வோர் இலக்கத்தையும் பெருக்கல் வேண்டும்.

$$\therefore \quad 2a+3a\ (a+2b-c)$$
$$=2a+3a^2+6ab-3ac. \quad \text{மறு.}$$

இவ்வாறு

I. $-6\ (2x^2-9x+1)$
$= -12x^2+54x-6.$ மறு.

II. க$-5$ (4ம$-$ப$+3$) $+\ 25$
$=$ க$-20$ம$+5$ப$-\ 15\ +\ 25$
$=$ க$-20$ம$+5$ப$+10.$ மறு.

**உதாரணம் 1. சுருக்குக.**

$$4x\ (a\ +\ b)-3x\ (a-2b)$$

**செய்கை.**

மேற்படி தொடரிலுள்ள அடைப்புக் குறிகளை நீக்கும்பொழுது $+\ 4x$ ஆல் $a\ +\ b$ ஐயும், $-\ 3x$ ஆல் $a-2b$ ஐயும் பெருக்கல் வேண்டும்.

$$\therefore \quad 4x\ (a+b)-3x\ (a-2b)$$
$$=4ax+4bx-3ax+6bx$$
$$=ax+10bx \quad \text{மறு.}$$

**உதாரணம் 2.**

1. $-\ (2x) = -1\ (+2x) = -\ 2x$
2. $(x+y)-(x-y)=x+y-x+y=2y$ மறு.

3. $(a+b)-(4a+2b)+3(a-3b)$
$=a+b-4a-2b+3a-9b$
$=-10b$ மறு.

4. $2ச-ம+3(ச-ம+2)+4ச+3ம$
$=2ச-ம+3ச-3ம+6+4ச+3ம$
$=9ச-ம+6$ மறு.

5. $x(x+y-z)+y(y+z+x)-z(y-z-x)$
$=x^2+xy-xz+y^2+yz-xy-yz+z^2+xz$
$=x^2+y^2+z^2.$ மறு.

உதாரணம் 3.

1. $(x+y)(x-y)=(x+y)\times(x-y)$
$=x(x-y)+y(x-y)$
$=x^2-xy+xy-y^2$
$=x^2-y^2$ மறு.

2. $(a+2b)^2=(a+2b).(a+2b)$
$=a(a+2b)+2b(a+2b)$
$=a^2+2ab+2ab+4b^2$
$=a^2+4ab+4b^2$ மறு.

## அப்பியாசம் 15.

சுருக்குக.

1. $2(5+8)$
2. $2(5-8)$
3. $2(5+8)+10$
4. $14-(72+6)$.
5. $100+10(4-6+1)$
6. $6+10(17-10)+1$
7. $6-10(17-10)+1$
8. $x(2x+5)$
9. $2x(x-10)-10x$
10. $100a+10a(4a-6a+a)$
11. $க(ம-ச)+ம(ச-ச)$
12. $6x-(5x-24+3)$
13. $2(m+n)-2(m-n)$
14. $2x(x-y+3)-x(x-y+3)$
15. $15ம(ம^2-ம+1)-15ம(ம^2+ம-1)$

16. $ax(a-b)-bx(b-a)$

17. $3(5m+2n)+10(m-n)-2(m-2n)$

18. $2pq(m+n)-3pq(2m+n)$

19. $(a+b)(a+b)$ 20. (க+ச) (க—ச)

21. $(m-n)^2$ 22. $(m-n)^2-(m-n)^2$

23. $(a+b+c)(a+b-c)$

24. $a(a+b)-b(b+c)-c(c+a)$

25. $(a+b)^2-(a+c)^2+(b+c)^2$.

## அடைப்புக்குறி நீக்கம் (பகுதி உ)

சில அக்ஷர இலக்கங்களின் மேல் கீறப்பட்டிருக்கும் ரேகை "வின்குலம்" (Vinculam) எனப்படும்.

**உதாரணம்** $a-\overline{b-c}$

(i) $a-\overline{b-c}=a-(b-c)=a-b+c$.

(ii) $a-\overline{b+c}=a-(b+c)=a-b-c$.

(iii) $a+\overline{b-c}=a+(b-c)=a+b-c$.

(vi) $a+\overline{b+c}=a+(b+c)=a+b+c$.

மற்றும் அடைப்புக்குறிகளாவன.

1. { } இரட்டை அடைப்புக் குறி.

2. [ ] "ப" வடிவ அடைப்பு அல்லது பகர அடைப்புக்கள்.

**உதாரணம் 1.**

$$17a-4b-[5a-3\{b-2(a-b)\}]$$

மேற்படி தொடரிலுள்ள அடைப்புக்குறிகளை நீக்கின் முதல் —2 ஆல் சாமானிய அடைப்புக்குறிக்குள்ளிருக்கும் $a-b$ ஐப் பெருக்கி அதை நீக்கிப் பின் —3 ஆல் இரட்டை அடைப்புக் குறிக்குள் வந்தவற்றைப் பெருக்கி அதை நீக்கிப் பின் — ஆல் (அதாவது —1 ஆல்) "ப" வடிவ அடைப்புக் குறிக்குள் வந்தவற்றையும் பெருக்கி அதையும் நீக்கி வந்த இலக்கங்கள் யாவற்றையுஞ் சுருக்குக.

எத்தொடரிலும் "வின்குலம்" வருமாயின் அதை முதலில் நீக்குக.

**செய்கை**

$$17a - 4b - [5a - 3\{b - 2(a - b)\}]$$
$$= 17a - 4b - [5a - 3\{b - 2a + 2b\}]$$
$$= 17a - 4b - [5a - 3b + 6a - 6b]$$
$$= 17a - 4b - 5a + 3b - 6a + 6b$$
$$= 6a + 5b \text{ மறு.}$$

**உதாரணம் 2**

பின்வரும் தொடரிலுள்ள அடைப்புக் குறிகளை நீக்குக.

$$3(a^2 - b^2) - 2[a^2 - \{b^2 + ab + b(b - \overline{a - b})\}]$$

**செய்கை I.**

$$3(a^2 - b^2) - 2[a^2 - \{b^2 + ab + b(b - \overline{a - b})\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - \{b^2 + ab + b(b - a + b)\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - \{b^2 + ab + b^2 - ab + b^2\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - b^2 - ab - b^2 + ab - b^2]$$
$$= 3a^2 - 3b^2 - 2a^2 + 2b^2 + 2ab + 2b^2 - 2ab + 2b^2$$
$$= a^2 + 3b^2 \text{ மறு.}$$

ஒவ்வோர் அடைப்புக் குறியும் நீக்கப்பட்ட ஒவ்வோர் முறையுமே நீக்கப்படவேண்டிய அடைப்புக் குறிக்குள் உள்ள இலக்கங்களைச் சுருக்கிக்கொண்டு வருதலுமுண்டு. பின்வரும் செய்கை II இதை உணர்த்துகிறது.

**செய்கை II.**

$$3(a^2 - b^2) - 2[a^2 - \{b^2 + ab + b(b - \overline{a - b})\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - \{b^2 + ab + b(b - a + b)\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - \{b^2 + ab + b(2b - a)\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - \{b^2 + ab + 2b^2 - ab\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - \{3b^2\}]$$
$$= 3a^2 - 3b^2 - 2[a^2 - 3b^2]$$
$$= 3a^2 - 3b^2 - 2a^2 + 6b^2$$
$$= a^2 + 3b^2 \text{ மறு.}$$

**உதாரணம் 3. சுருக்குக.**

$$(x+y)^2+(x-y)^2-2(x+y)(x-y.)$$

**செய்கை.**

$$\begin{aligned}&(x+y)^2+(x-y)^2-2(x+y)(x-y)\\&=(x^2+2xy+y^2)+(x^2-2xy+y^2)-2(x^2-y^2)\\&=(x^2+2xy+y^2+x^2-2xy+y^2-2x^2+2y^2)\\&=4y^2 \text{ மறு.}\end{aligned}$$

## அப்பியாசம் 16.

**சுருக்குக.**

**1.** $5+2(8-5)+3(4+2)$. **2.** $க+5(ம-க)-4(க-ம)$

**3.** $3+10\{12-(3-6)\}$. **4.** $a+10\{2x-(a-x)\}$.

**5.** $க\{க^2-2(க-1)\}$. **6.** $m+\{n-(\overline{m+n-m})\}$.

**7.** $க+2(ச+ப)-\{க+ச-ப-4(ச-2ப)\}$.

**8.** $3a-2(b-c)-2\{a-b-(3c+a)\}$.

**9.** $n-[n-n+m-\{n-m-n\}]$.

**10.** $15-2[6-\{2(6-4)-4\}]$.

**11.** $2p-2[2p-\{2(2p-q\}]$.

**12.** $5a-4x[10a+3\{x-(a-\overline{2a-2x})\}]$.

**13.** $3x(x-y)-2[x^2-y(y+x+y-3x)]$.

**14.** $x^2-[y^2-3(x^2-y^2-z^2)-z^2]$.

**15.** $16-[10-3-\{15+6-2(-9-30-10)\}]$.

**16.** $x-[2y+\{3z-(3x-\overline{x-y+z})\}+(2y-3z)]$.

**17.** $(a+b)(a-b)-(a-b)^2$

**18.** $(க+ம)^2-(க+ம)^2-3(கம-6கம)$.

**19.** $(5+10)(5-10)+100$.

**20.** $(a+2b)(a+2b)-4ab$.

**21.** $4ab(3x-y)-3ab[6x-2\{(2x-y)-(x-y)\}]$.

**22.** $2x(x^3-x+2)-(2x^2-x-2)^2$

**23.** $(x-2)^3-(4x-3)(x^2+1)+3x(x+3)^2$

24. $(5x-3)(6x-5)-9(2x-1)^2+(3x-1)(2x+3)$.

25. $(2x+5)(7x-3)-3(5x-3)^2+(6x-1)(11x-12)$

26. $1-a-(1-\overline{a+a^2})-\{1-(a-\overline{a^2+a^3})\}-[1-\{a-(a^2-\overline{a^3+a^4})\}]$.

---

# தனிச்சமீகரணம் (பகுதி உ)

**சில விதிகள்.**

**1. சமன்களுடன் சமனைக் கூட்டினல் வரும் கூட்டுத் தொகைகள் சமன்.**

**உதாரணம்** $x=a$ ஆனல்

(i) $x+2=a+2$ (ii) $x+y=a+y$.

**2. சமன்களிலிருந்து சமனைக் கழித்தால் வரும் வித்தியாசங்கள் சமன்.**

**உதாரணம்** $x=a$ ஆனல்

(i) $x-2=a-2$. (ii) $x-y=a-y$.

**3. சமன்களின் இருபக்கமும் ஒரே தொகையால் பெருக்கப் படும்போது வரும் பெருக்குத் தொகைகள் சமன்.**

**உதாரணம்** $x=y$ ஆனல்

(i) $2x=2y$. (ii) $ax=ay$.

**4. சமன்களின் இருபக்கமும் ஒரே தொகையால் பிரிக்கப் படும்போது வரும் ஈவுகள் சமன்.**

**உதாரணம்.** $x=y$ ஆனல்

(i) $\frac{x}{10}=\frac{y}{10}$. (ii) $\frac{x}{a}=\frac{y}{a}$.

ஆகையால் நாம் (1) $x+2=a+2$ ஆனல் $x=a$ எனவும்

(2) $x-2=a-2$ „ $x=a$ „

(3) $xy=ay$ „ $x=a$ „

(4) $\frac{x}{2}=\frac{a}{2}$ „ $x=a$ „

மாறுவிதிகளாகவுங் கொள்ளலாம்.

**உதாரணம் 1.**

$x+15=3x+5$ ஆனால் $x$ இன் விலை யாது ?

**செய்கை**

$$x+15=3x+5$$

$$* \quad x+15-3x=3x+5-3x \quad (2\text{ம் விதி})$$

சுருக்கினால் $15-2x=5$.

பின்பும்[1] $15-2x-15=5-15$ (2ம் விதி)

சுருக்கினால் $-2x=-10$

$$^{2} \quad \frac{-2x}{-2}=\frac{-10}{-2} \qquad (4\text{ம் விதி})$$

சுருக்கினால் $x=5$ மறு.

**சரி பிழை காணல்**

$x=5$ ஆயின்

$x+15=5+15=20$.

$3x+5=15+5=20$.

$\therefore x=5$ என்பது சரி.

**உதாரணம் 2.**

ஒரு பழத்தின் விலையுடன் 8 சதத்தைக் கூட்டின் 25 சதம். பழத்தின் விலை யாது?

1 பழம் + 8 சதம் = 25 சதம்.

$\therefore$ 1 பழம் = 25 சதம் — 8 சதம் (= 17 சதம்) மறு.

இது போன்றே $x+8=25$ ஆனால்

$x=25-8 \quad (=17)$ மறு.

மேற்படி கணக்குகளிலிருந்து சமன் அடையாளத்திற்கு இடப்பக்கத்திலுள்ள +8 வலப்பக்கத்திற்கு மாற்றப்பட்ட பொழுது —8 ஆக மாறினதையும் அவ்வாறு ஏன் மாறினதென் பதையும் அறிகிறோம்.

இவ்வாறு இடப்பக்கத்திலுள்ள அடையாளங்கள் வலப் பக்கத்திற்கு மாற்றப்படும் பொழுதும், வலப்பக்கத்துள்ளவை இடப்பக்கத்திற்கு மாற்றப்படும் பொழுதும் தத்தம் அடை யாளங்களில் மாற்றமடையும்.

---

* இருபக்கமும் $3x$ கழிக்கப்பட்டது.

[1] ,, 15 ,,

[2] ,, — 2 ஆல் பிரிக்கப்பட்டது.

**உதாரணம் 3. விடுவிக்க.**

$5க + 10க - 8 = 2க + 104 - க.$

அக்ஷர இலக்கங்களை இடப்பக்கத்திற்கும் சாதாரண இலக்கங்களை வலப்பக்கத்திற்கும் கொணர்ந்தால் (இவ்வாறு செய்தலே சுலப வழி) அப்போது

$5க + 10க - 2க + க = 104 + 8$

$\therefore 14க = 112.$

$\therefore க = 8$ மறு.

$$\left\{\begin{array}{c} \textbf{சரி பிழை காணல்: } க = 8 \text{ ஆனால்} \\ 5க + 10க - 8 = 40 + 80 - 8 = 112 \\ 2க + 104 - க = 16 + 104 - 8 = 112 \\ \therefore க = 8. \end{array}\right\}$$

**உதாரணம் 4. விடுவிக்க.**

$$\frac{4a}{5} - \frac{a}{4} = \frac{a}{5} + \frac{3}{10}$$

**செய்கை I.** 5, 4, 5, 10 முதலியவற்றின் சி. சா. மு. = 20. இருபக்கங்களையும் 20 ஆற் பெருக்கினால்

$$20\left(\frac{4a}{5} - \frac{a}{4}\right) = 20\left(\frac{a}{5} + \frac{3}{10}\right)$$

$$\therefore \frac{20 \times 4a}{5} - \frac{20 \times a}{4} = \frac{20 \times a}{5} + \frac{20 \times 3}{10}$$

சுருக்கினால் $16a - 5a = 4a + 6$

$\therefore \quad 16a - 5a - 4a = 6$

$\therefore \quad 7a = 6 \qquad \therefore a = \frac{6}{7}$ மறு.

**செய்கை II.** சுலப வழி.

$$\frac{4a}{5} - \frac{a}{4} = \frac{a}{5} + \frac{3}{10} \quad (\text{சி. சா. மு.} = 20)$$

ஆகையால் இருபதைக் கீழ் இலக்கங்களாற் பிரித்து மேல் இலக்கங்களாற் பெருக்கினால்

$$* \quad 4 \times 4a - 5 \times a = 4 \times a + 2 \times 3.$$

$$\therefore 16a - 5a = 4a + 6.$$

$$\therefore 16a - 5a - 4a = 6. \qquad \therefore 7a = 6$$

$$\therefore a = \frac{6}{7} \text{ மறு.}$$

**உதாரணம் 5.** **விடுவிக்க.**

$$\frac{7x-3}{20} - \frac{x+3}{4} = \frac{x-1}{2}$$

(சி. சா. மு. 20)

$$\therefore 1(7x-3)-5(x+3)=10(x-1)$$

$$\therefore 7x-3-5x-15=10x-10.$$

$$\therefore 2x-10x=-10+3+15.$$

$$-8x=8.$$

$$\therefore x=-1 \text{ மறு.}$$

**உதாரணம் 6.** **பின்வரும் சமீகரணங்களை விடுவிக்க.**

(1) $\frac{க}{5} = 4\frac{1}{5}$. (2) $\frac{5x}{6} = \frac{4}{3}$. (3) $\frac{3}{2x} - \frac{15}{20} = 0$.

**சய்கை.** (1) $\frac{க}{5} = 4\frac{1}{5}$.

$$\therefore \frac{க}{5} = \frac{21}{5}. \therefore க = 21 \text{ மறு.}$$

(2) $\frac{5x}{6} = \frac{4}{3}$

குறுக்கே பெருக்கினல்

$3 \times 5x = 6 \times 4$. (சி. சா. மு. கீழே போடவேண்டாம்)

$$\therefore 15x = 24. \qquad \therefore x = \frac{24}{15} = 1\frac{3}{5} \text{ மறு.}$$

(3) $\frac{3}{2x} - \frac{15}{20} = 0$.

$$\therefore \frac{3}{2x} = \frac{15}{20}$$

---

* சமீகரணத்தின் இருபக்கங்களிலுமுள்ள கீழ் இலக்கங்களின் சி. சா. மு. ஒரே பொதுத் தொகையானபடியால் நாம் அந்தச் சி. சா. மு. ஐக் கீழே கொள்ளாமல் நீக்கிவிடலாம். (4-ம் விதி)

குறுக்கே பெருக்கினுல்

$20\times 3 = 2x\times 15.$

$\therefore\ 60 = 30x. \quad \therefore\ x = 2$ மறு.

மேற்படி உதாரணங்களில் காட்டப்பட்ட மாதிரியான கணக்குகளைக் குறுக்கே பெருக்கிச் செய்தலே சுலப வழி.

**உதாரணம் 7.**

1. $\frac{1}{12}(9x-2) = \frac{1}{15}(x-1)+4.$ $x$ இன் விலை யாது?

**செய்கை.**

12 இனதும் 15 இனதும் சி. சா. மு. $= 60$

$\therefore\ 5(9x-2) = 4(x-1)+4\times 60. \qquad (4=\frac{4}{1})$

$\therefore\ 45x-10 = 4x-4+240.$

$45x-4x = -4+240+10.$

$\therefore\ 41x = 246.$

$\therefore\ x = 6$ மறு.

2. $\frac{1}{2}(4n-7) - 7(n-\frac{1}{3}) + \frac{1}{3}(9n-4) - 6\frac{1}{6} = 0.$
$n$ இன் விலை காண்க.

**செய்கை:**

$\frac{1}{2}(4n-7) - 7(n-\frac{1}{3}) + \frac{1}{3}(9n-4) = \frac{37}{6}$

2, 3, 6, முதலியவற்றின் சி. சா. மு. = 6.

$\therefore\ 3(4n-7) - 7\times 6(n-\frac{1}{3}) + 2(9n-4) = 37.$

$\therefore\ 12n-21-42n+14+18n-8 = 37.$

$12n-42n+18n = 37+21-14+8.$

$\therefore\ -12n = 52.$

$\therefore\ n = -\frac{52}{12} = -4\frac{1}{3}$ மறு.

## அப்பியாசம் 17

**விடுவிக்க.**

1. $7க = -2க + 27.$
2. $a - 20 = 14 - a.$
3. $3n + 4 = 4n - 3.$
4. $14x + 5 = 60 + 3x.$
5. $24 + 5ம = 2ம + 45.$
6. $8a - 33 = a - 4a.$
7. $4x - 10 - 2x + 25 = 0.$
8. $4a - 5 = 5a - 8.$
9. $4x + 10 = 2x - 30.$
10. $23n - 20n - 14 = 20 - 7n + 16.$

பின்வரும் சமீகரணங்களிலுள்ள அக்ஷரங்களின் விலை காண்க.

11. $\frac{3a}{2}=\frac{6}{7}$.  12. $\frac{3}{ம}=\frac{2}{5}$.

13. $\frac{5க}{6}=10$.  14. $\frac{3}{x}=\frac{5}{10}$.

15. $\frac{2x}{5}=1\frac{3}{5}$.  16. $\frac{2}{3}x-6=0$.

17. $\frac{7a}{2}-\frac{4a}{5}=8\frac{1}{10}$.  18. $\frac{7க+2}{5}-\frac{4க-1}{2}=0$.

19. $5(x+4)=2x+29$.

20. $2(4-n)-3(n-7)-16n=1$.

விடுவிக்க.

21. $5(2x-1)=25$.  22. $7(5n-9)=21$.

23. $3(க-1)=5(க-3)$

24. $\frac{2}{3}(6-a)=\frac{3}{4}(a+8)+19$.

25. $\frac{1}{2}(x+5)=\frac{3}{5}(61-x)$.

26. $\frac{2x+5}{3}+\frac{4x-5}{7}=\frac{10x-11}{6}$.

27. $\frac{3ம+1}{4}+\frac{2ம}{3}=\frac{10ம-1}{4}-\frac{7}{12}$.

28. $\frac{7x+6}{12}-\frac{5x-4}{6}=\frac{3x-2}{4}-\frac{2x-1}{3}$.

29. $\frac{9n-4}{3}+\frac{4n-7}{2}-\frac{21n-7}{3}=6\frac{1}{6}$.

30. $\frac{1}{8}(3-4x)-\frac{1}{5}(4+5x)+\frac{1}{3}(7x+11)=0$.

31. $\frac{1}{20}(7a-3)-\frac{1}{2}(a-1)=\frac{1}{4}(a+3)$.

32. $\frac{1}{4}(அ-2)-\frac{1}{6}(2அ-5)+\frac{3அ}{20}=1$.

33. $\frac{3க-7}{4}-\frac{3(7க+9)}{10}+8\frac{1}{2}=0$.

**34.** $6\left(\frac{1}{3}x-\frac{1}{2}\right)-12\left(\frac{5}{6}x+34\right)$ இத்தொடரின் விலை 20 ஆக $x$ இன் விலை என்னவாயிருத்தல் வேண்டும்?

**35.** $\frac{x}{2}+1$ என்பது $\frac{x}{3}-4$ இலும் இருமடங்கு பெரிதாயிருக்கவேண்டுமாயின் $x$ இன் விலையென்ன?

---

# தனிச்சமீகரணக் கணக்குகள்

## (அக்ஷர இலக்கப் பிரயோகம்)

**உதாரணம் 1.** இரு எண்களின் கூட்டுத்தொகை 45. ஒன்று 17. மற்றைய எண்ணைக் காண்க.

**செய்கை.**

2-ம் எண் $x$ எனக்கொள்வோம்

அப்போது $17 + x = 45$

$\therefore \; x = 45 - 17 = 28$ மறு.

**உதாரணம் 2.** இரு எண்களின் கூட்டுத்தொகை 57. அவற்றின் வித்தியாசம் 13. அவ்வெண்களைக் காண்க.

**செய்கை.**

ஒரு எண் $x$ எனக்கொள்வோம்

ஆகையால் மற்றைய எண் $57-x$

$\therefore$ இரண்டினதும் வித்தியாசம் $x-(57-x)=13$.

அடைப்புக் குறிகள் நீக்கப்படின் $x-57+x=13$.

$\therefore \; 2x = 13 + 57 = 70. \qquad \therefore \; x = 35.$

$57 - x = 57 - 35 = 22.$

$\therefore$ இரு எண்களும் **35, 22.** மறு.

**குறிப்பு:** $35 + 22 = 57.,\; 35 - 22 = 13$ எனவே விடை சரி. இவ்வாறு ஒவ்வோர் அப்பியாசத்துக்கும் விடை பெற்றபின் சரி பிழை காணல் ஏற்றது.

**உதாரணம் 3.** மூன்று அடுத்துவரும் எண்களுடைய கூட்டுத் தொகை 45. அவற்றைக் காண்க.

**செய்கை.**

முதலாம் எண் $x$ எனக்கொள்வோம்.

அப்போது இரண்டாம் ,, $x+1$ [$51 = 50+1$ என்பதுபோல]

மூன்றும் ,, $x+2$ [$52 = 50+2$ என்பதுபோல]

$\therefore \quad x + (x+1) + (x+2) = 45.$

$\therefore \quad x + x + 1 + x + 2 = 45.$

$\therefore \quad 3x = 45 - 3 = 42.$

$\therefore \quad x = 14.$

$\therefore \quad x + 1 = 14 + 1 = 15.$

$\therefore \quad x + 2 = 14 + 2 = 16.$

$\therefore$ குறிக்கப்பட்ட எண்கள் = **14, 15, 16** ஆகும். மறு.

$(14 + 15 + 16 = 45).$

**உதாரணம் 4.** ஒரு பையில் ஓர் தொகையான ரூபா நாணயங்களும் அவற்றிலும் 4 மடங்கு அரை ரூபா நாணயங்களும் இரண்டினதும் தொகையான கால்ரூபா நாணயங்களுமாக 106 ரூபா 25 சதம் பெறுமதியான நாணயங்கள் உண்டு. ஒவ்வோர் இனத்திலும் எத்தனை நாணயங்கள்?

**செய்கை.**

ரூபா நாணயங்கள் $m$ எனக்கொள்வோம்.

$\therefore$ அரைரூபாய் நாணயங்கள் $4m$;

கால்ரூபாய் நாணயங்கள் $4m + m = 5m$.

$\therefore$ முழு நாணயங்களின் பெறுமதி

$1(m) + \frac{1}{2}(4m) + \frac{1}{4}(5m) = 106\frac{1}{4}.$

$\therefore \quad 4(m) + 2(4m) + 1(5m) = 425.$

$\therefore \quad 4m + 8m + 5m = 425.$

$\therefore \quad 17m = 425. \qquad \therefore m = 25.$

$\therefore$ ரூபா நாணயங்கள் = **25**

அரைரூபா ,, $25 \times 4 =$ **100**

கால்ரூபா ,, $100 + 25 =$ **125**

மறு.

**உதாரணம் 5.** மகனிலும் பார்க்கத் தகப்பனுக்குத் தற்போது இருமடங்கு வயது. 25 வருடங்களுக்கு முன்னர் தகப்பன் மகனிலும் 7 மடங்கு வயதுடையவனுயிருந்தான். இருவரினதும் தற்போதைய வயதுகளென்ன?

**செய்கை.**

மகனுக்குத் தற்போது $v$ வயதெனக்கொள்வோம்.

ஆகவே தகப்பனுக்குத் தற்போது வயது $2v$.

25 வருடங்களுக்குமுன் மகனது வயது $v - 25$.

25 ,, தகப்பனது ,, $2v - 25$.

$$\therefore \quad (v - 25) = \tfrac{1}{7}(2v - 25).$$
$$\therefore \quad 7(v - 25) = 1\,(2v - 25).$$
$$7v - 175 = 2v - 25.$$
$$5v = 150. \qquad \therefore \; v = 30.$$

∴ மகனின் தற்போதைய வயது = **30**
தகப்பனின் ,, ,, = **60** } மறு.

**உதாரணம் 6.** ஓர் குவியலின் $\frac{4}{5}$ பங்கு மறு குவியலின் $\frac{2}{3}$ பங்கிற்குச் சமனுகும்படி 99 பழங்களைப் பகிர்.

**செய்கை.**

ஓர் குவியல் $x$ பழங்கள் எனக் கொள்வோம்.
அப்போது மறு குவியலில் $99 - x$ பழங்கள்.

ஆகவே கணக்கின்படி

$$\therefore \quad \tfrac{4}{5}x = \tfrac{2}{3}(99 - x).$$
$$\therefore \quad 3 \times 4x = 5 \times 2\,(99 - x)$$
$$12x = 990 - 10x$$
$$22x = 990$$
$$\therefore \quad x = 45$$
$$\therefore \quad 99 - x = 99 - 45 = 54$$

{ 45 இன் $\frac{4}{5} = 36$
54 இன் $\frac{2}{3} = 36$ }

∴ இரு குவியல்களிலும் முறையே **45** பழங்களும் **54** பழங்களும் உண்டு. மறு.

## அப்பியாசம் 18.

**பின்வரும் கணக்குகளைச் சமீகரணமுறையிற் செய்க.**

1. இரு எண்களின் கூட்டுத்தொகை 66. ஒன்று 43. மற்ற எண் யாது?

2. இரு தொகைக்குமிடையில் 26 வித்தியாசமிருக்கும்படி 500 ஐ இரண்டு பாகங்களாகப் பிரிக்குக.

3. இரு எண்களின் கூட்டுத்தொகை 65. அவற்றின் வித்தியாசம் 17. இரு எண்களையுங் காண்க. அவற்றின் பெருக்குத்தொகை யாது?

4. இராமனிலும் பார்க்கக் கந்தனுக்கு 50 சதம் கூடச் சேரும் வண்ணம் ரூபா 2-70 ஐ இருவர்க்கும் பகிர்க.

5. என்னிடமும் மகேசனிடமும் 50 ரூபா உண்டு. நான் மகேசனிலும்பார்க்க 12 ரூபா கூடவைத்திருந்தால் மகேசனிடம் எத்தனை ரூபா உண்டு?

6. A யிலும்பார்க்க B க்கு 7 ரூபா கூடச் சேரும்படி 45 ரூபா 25 சதத்தை இருவருக்கும் பகிர்க.

7. A யிலும் பார்க்க B க்கு ரூ. 15-10 கூடச் சேரும்படி ரூ. 257 ஐ இருவர்க்கும் பகிர்க.

8. ஓர் எண்ணின் இருமடங்குடன் 5 ஐக் கூட்டினால் 247 ஆகும். அவ்வெண் யாது?

9. இரு எண்களின் கூட்டுத்தொகை 36. ஒன்று மற்றதிலும் 5 மடங்காகும். இரு எண்களையுங் காண்க.

10. A யிலும் B க்கு மூன்று மடங்கும் B யிலும் C க்கு இரண்டு மடங்குஞ் சேரும்படி ரூ. 100 ஐ மூவர்க்கும் பகிர்க.

11. ஓர் எண்ணின் $\frac{1}{3}$ உம் $\frac{1}{5}$ உம் சேர்ந்து 16. அவ்வெண் யாது?

12. இரு எண்களின் கூட்டுத்தொகை 14. சிறிய எண்ணின் 5 மடங்கு பெரிய எண்ணின் 2 மடங்கிற்குச் சமன். இரு எண்களையுங் காண்க.

13. ஓர் குவியலின் $\frac{1}{4}$ பங்கு மறுகுவியலின் $\frac{1}{5}$ க்குச் சமனுகும்படி 180 எலுமிச்சம் பழங்களைப் பகிர்க.

14. ஓர் துண்டின் $\frac{2}{3}$ பங்கு மறுதுண்டிற்குச் சமனுகும்படி 40 அடி நீளமுடைய கயிற்றை இரு துண்டுகளாக்கின் ஒவ்வோர் துண்டின் நீளமுமென்ன ?

15. ஒருவனுடைய மரணசாதனப் பொருளின் எட்டில் மூன்று பங்கு 930 ரூபா பெறுமதியாயின் அப்பொருள் முழுவதும் என்ன பெறும் ?

16. மூன்று அடுத்துவரும் எண்களின் கூட்டுத்தொகை 63. அவ்வெண்களெவை ?

17. மூன்று அடுத்துவரும் எண்களின் மொத்தம் முதலாம் எண்ணின் $\frac{1}{3}$ பங்கின் 10 மடங்குக்குச் சமன். அவ்வெண்களெவை ? மொத்தமென்ன ?

18. ரூ. 60 ஐ A, B, C என்பவர்களிடை பகிர்ந்த போது, A யிலும்பார்க்க B 8 ரூபா கூட்வும், இருவர் தொகையிலும் $\frac{1}{4}$ பங்கு C யும் பெற்றனர். ஒவ்வொருவரும் எத்தனை ரூபா பெற்றனர் ?

19. ஓர் பையில் 1: 2: 3 வீதம் 10 சத நாணயங்களும் 5 சத நாணயங்களும் ஒரு சத நாணயங்களுமாக 60 நாணயங்கள் உண்டு. ஒவ்வோர் இனத்திலும் எத்தனை நாணயங்கள் ? அப்பையிலுள்ள காசுத்தொகை எவ்வளவு ?

20. ஒரு பெட்டியில் ஓர் தொகையான ரூபா நாணயங்களும் அவற்றிலும் இருமடங்கு அரைரூபா நாணயங்களும் பிந்தியதில் இருமடங்கு கால்ரூபா நாணயங்களுமாக ரூபா 30 பெறுமதியான நாணயங்களுண்டு. ஒவ்வோர் இனத்திலும் எத்தனை நாணயங்கள் ?

21. தகப்பன் மகனிலும் 26 வயது கூடியவன். இருவரின் வயதுஞ் சேர்ந்து 50. மகனின் வயதென்ன ?

22. தகப்பனதும் மகனதும் வயது மொத்தம் 55. மகன் தகப்பனிலும் $\frac{1}{4}$ மடங்கு வயதுடையவனுயின் இருவரது வயதையுங் காண்க.

23. மகன் தகப்பனிலும் பார்க்க இப்போது 30 வயது குறைவுடையவன். 8 வருடங்களுக்கு முன்னர் மகன் தகப்பனின் $\frac{1}{4}$ மடங்கு வயதுடையவன். இவர்களின் தற்போதைய வயதுகளென்ன ?

24. தகப்பனதும் மகனதும் வயது மொத்தம் 54. இரண்டு வருட காலத்தில் மகனுக்கு வரும் வயதைப் போல் தகப்பன் 3 மடங்கு வயதுள்ளவனுய் இருப்பான். இருவரினதும் தற்போதைய வயதென்ன ?

25. வேலன் இப்போது இராமனிலும் மூன்று மடங்கு வயதுடையவனுகவும், 5 வருடங்களுக்கு முன்பு நான்கு மடங்கு வயதுடையவனுகவும் இருந்தால் வேலனின் தற்போதைய வயதென்ன ?

26. இப்போது A இன் வயது B இன் வயதைப்போல் 2 மடங்கு. 4 வருடங்களுக்குமுன் A இன் வயது B இன் வயதைப்போல் 3 மடங்கு. இருவரினதும் தற்போதைய வயதுகளென்ன ?

27. A யிலும்பார்க்க B இருமடங்கு பெறும்படியாகவும் B யிலும்பார்க்க C நான்கு மாபிள்கள் குறையப் பெறும்படியாகவும் 66 மாபிள்களை மூவர்க்கும் பகிர்க.

28. ஒருவன் ஓர் குறிக்கப்பட்ட வேகமாக 4 மணித்தியாலங்கள் ஓடி, முந்திய வேகத்திலும் மணித்தியாலம் இரு மைல் குறைவாக 2 மணித்தியாலங்கள் நடந்து 29 மைல்தூரத்திலுள்ள ஓர் இடத்தை அடைந்தான். அவன் ஓடிய வேகமென்ன ?

29. 10 அடி நீளம், 5 அடி அகலமுள்ள ஒரு சமகோணத்தொட்டியில் h அடி ஆழத்துக்கு நீரை ஊற்றினுல் அந்த நீர்த்தொகுதி 550 கன அடியிருக்கும். தொட்டியிலுள்ள நீரின் ஆழமென்ன ?

30. 10 அடி நீளம், $x$ அடி அகலமுள்ள ஒரு பூந்தோட்டத்தின் நீளம் அகலம் ஒவ்வொன்றிலும் 2 அடியைக் குறைக்க அதன் பரப்பில் 32 சதுர அடி குறைந்துவிடுமாயின் அதன் பழைய பரப்பென்ன ?

**31.** ஒரு கார் ஓர் பயணத்தை 7 மணித்தியாலத்திலும் இன்னொன்று மணித்தியாலம் 5 மைல் வீதம் கூட ஓடி 6 மணி நேரத்திலும் செல்கின்றன. பயணத் தூரத்தைக் காண்க.

**32.** எப்பொழுதும் ஒற்றையாயிருக்கின்ற ஓர் எண்ணை அக்ஷர கணித முறைப்படி எவ்வாறு எழுதலாம்? அடுத்து வரும் 3 ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை 183 ஆயின் அவ்வெண்களைக் காண்க.

---

## அத்தியாயம் V

# கணன ரேகைகள் (Graphs.)

ஓர் குறிக்கப்பட்ட தொகையினவாகிய பழங்கள் ஓர் குறிக்கப்பட்ட விலை உள்ளன என வைத்துக்கொள்வோம். அப்போது மேற்படி பழங்களின் தொகை இருமடங்காகும் போது விலை இருமடங்காகவும், பழங்களின் தொகை 4 மடங்காகும் போது விலை நாலு மடங்காகவும், இவ்வாறு பழங்களின் மாற்றத்திற்கேற்ப விலையும் மாறுதலடையும். தரப்பட்ட சதுரக் கோடுகள் உள்ள கடுதாசியில் பழங்களும் அதற்கேற்ப விலையும் மாறுதலடையும்போது இரண்டினதும் நிலையை உணர்த்துமாறு கீறப்பட்ட ரேகை **கணன ரேகை** (கிறுவ்) எனப்படும்.

**உதாரணம் 1.**

**1. மூன்று பழங்களின் விலை 5 சதமானால் (i) 10 பழங்களின் விலை என்ன எனவும் (ii) 17 சதத்திற்கு எத்தனை பழம் வாங்கலாம் எனவும் "கிறுவ்" கீறி விளக்குக.**

| | | | |
|---|---|---|---|
| பழங்கள் | 3 | 6 | 12 |
| விலை சதம் | 5 | 10 | 20 |

மேற்காட்டியவாறு 3, 6, 12 என வரும் பழங்களின் தொகையையும் அவற்றிற்குரிய விலைகளாகிய 5, 10, 20 சதங்களையும் கோட்டினுள் அடைத்துக் கீழ்க்காட்டியவாறு தரப்பட்

டிருக்கும் கணனரேகைக் கடுதாசியில் (*Graph paper*) OX என்னும் கணன ரேகையை வரைக.




(உரு. 1)

**மேற்படி கணன ரேகை வரையும் விதம்:—**

O A இல் ஒவ்வோர் இடைவெளியையும் ஒவ்வோர் சதமாகவும, O B இல் ஒவ்வோர் இடைவெளியையும் ஒவ்வோர் பழமாகவும் குறிக்க. பின்னர் சதம் 5-க்கு நேரும் பழம் 3-க்கு நேருமுள்ள **பொதுவான புள்ளியையும**, சதம் 10, பழம் 6 என்னும் பொதுவான **புள்ளி**யையும், சதம் 20. பழம் 12 என்னும் பொதுவான புள்ளியையும் படத்தில் காட்டிய மாதிரிக் குறித்துக் கொள்க. இம்மூன்று புள்ளிகளையும் ஓர் நேர் ரேகையால் இணைக்க. கணன ரேகை கீறப்பட வேண்டிய மாதிரி இதுவாகும்.

**(i) 10 பழத்தின் விலை காணலும், (ii) 17 சதத்திற்கு எத்தனை பழமெனக் காணலும் :—**

(i) O B யில் பத்தாம் பழம் எவ்விடம் வருமெனக் குறிக்கவும், பின்பு O B இல் அந்த 10 காட்டும் புள்ளியிலிருந்து O B க்கு லம்பம் மேற்படி கணன ரேகையைத் தொடும் வரைக்கும் **புள்ளி ரேகையாய்க் கீறவும்**. இப்புள்ளி ரேகையின் நீளம் O A இல் எத்தனை கோட்டிற்குச் சமன் என அறியவும். அது 16 கோட்டிற்குச் சமன். ஆகையால் 10 பழங்களின் **விலை 16** சதம் வரையிலாகும். மறு.

(ii) இவ்வாறு 17-ம் சதத்திலிருந்து கீறப்பட்ட புள்ளி லம்ப ரேகை O B யில் $10\frac{1}{2}$ கோட்டிற்குச் சமன். ஆகையால் 17 சதத்திற்கு = **11** முழுப்பழம். மறு.

பழங்களின் தொகை விகிதத்திற்கேற்ப விலை விகிதமும் அதிகரிப்பதால் மேற்படி கணன ரேகை ஓர் நேர் ரேகையாய் அமைதல் நோக்கற்பாலது.

உதாரணம் 2.

பின்வரும் சோட்டுத் தொகைகள் காலை 8 மணி தொடக்கம் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு முறையாக "பரனைட்" தாபமானியால் அளக்கப்பட்ட ஒரு பகலின் உஷ்ணத்தைக் குறிக்கின்றன. "கிருவ்" கீறி அதி உஷ்ணம் எந்த மணியில் என்பதை அறிக.

| | முற்பகல் | | | பிற்பகல் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நேரம் | 8 | 10 | 12 | 2 | 4 | 6 | 8 | மணி. |
| உஷ்ணம் | 42 | 45·5 | 58 | 58·5 | 53 | 49 | 43 | பாகை. |

கிருவ்.




(உரு. 2.)

X A இல் இவ்விரண்டு மணிகளுக்கு 5 இடைவெளியும் X B இல் ஒவ்வோர் பாகை உஷ்ணத்திற்கு ஒவ்வோர் இடைவெளியும் கொள்ளப்பட்டது.

பின்பு 8 மணிக்கும் 42 பாகைக்கும் பொதுவான புள்ளியும், 10 மணிக்கும் 45·5 பாகைக்கும் பொதுவான புள்ளியும், இன்னும் இவைபோல மற்றைய பொதுவான புள்ளிகளும் இடப்

பட்டன. இப்புள்ளிகள் யாவும் ஓர் வளைந்த ரேகை யால் இணைக்கப்பட்டன. இந்த ரேகையே உஷ்ணத்திற்கும் நேரத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டி நிற்பது.

இந்த ரேகையின் அதி உயரத்தில் வளையும் புள்ளியிலிருந்து X A க்கு ஓர் புள்ளி ரேகை லம்பம் கீறப்பட்டது. இப்புள்ளி ரேகை X A ஐ எந்த மணியில் வெட்டுகிறதோ அதுவே ஆகக் கூடிய உஷ்ணமான நேரமாகும்.

∴ **ஆகக் கூடிய உஷ்ணமான நேரம் பிற்பகல் 1 மணி மறு.**
**ஆகக் கூடிய உஷ்ணமும் கேட்கப்படின் அது 60 பாகை.**

## கணன ரேகை கீறும்போது கவனிக்கப்பட வேண்டிய விதிகள்.

i. ஒரு பொருளைக் காட்டுவதற்கு எத்தனை கோடுகள் எடுக்கப்பட்டன என்பதைக் கூறுக.

ii. சதுரங்களாக அச்சிடப்பட்ட காகிதத்திலேயே கணன ரேகை கீறல் வேண்டும்.

iii. கணன ரேகையை மையால் கீறல் ஏற்றதல்ல. முதலில் ஈயலேகினியால் மெல்லிய ரேகையாய்க் கீறி அதன்மேல் பின்பு ஊன்றிக் கீறல் வேண்டும்.

iv. கணன ரேகை கீறத்தொடங்குமுன் பொதுப்புள்ளிகள் யாவையும் இடல் வேண்டும்.

v. உதாரணத்தில் காட்டப்பட்ட மாதிரி யாவும் குறிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

### அப்பியாசம் 19.

**1.** 2 புஸ்தகங்களின் விலை 3 ரூபாவானால் 2 புஸ்தகம் 3 ரூபா; 4 புஸ்தகம் 6 ரூபா; 6 புஸ்தகம் 9 ரூபா எனக் கொண்டு "கிருவ்" கீறி அதிலிருந்து (i) 5 புஸ்தகம் என்ன விலை எனவும், (ii) 15 ரூபாவுக்கு எத்தனை புஸ்தகமெனவும் அறிக.

**2.** 4 பழம் 10 சதமானால் 2 பழம் என்ன விலை என்ப தையும் 7 பழம் என்ன விலை என்பதையும் "கிருவ்" கீறி அறிக.

3. 2 சிலிங் 3 ரூபாய்க்குச் சமமானால் 8 சிலிங் இலங்கை நாணயத்திலெவ்வளவு எனக்காட்டும் "கிருவ்" கீறி அதிலிருந்து 9 ரூபாவுக்கு எத்தனை சிலிங் சமனென அறிக.

4. காலை 6 மணி தொடக்கம் இரு மணித்தியாலங்களுக்கொரு முறையாக அளக்கப்பட்ட உஷ்ணம் எவ்வளவு பாகை எனப் பின்வருமாறு தரப்பட்டிருக்கிறது. ஓர் கணன ரேகை கீறி அதிலிருந்து பிற்பகல் 3 மணிக்கு உஷ்ணம் எத்தனை பாகை என்பதை அறிக:—

| | முற்பகல் | | | பிற்பகல் | | |
|---|---|---|---|---|---|---|
| நேரம் | 8 | 10 | 12 | 2 | 4 | 6 |
| உஷ்ணம் | 28° | 29° | 30·5° | 31° | 28° | 27·5° |

5. ஒரு குதிரை புறப்பட்ட இடத்திலிருந்து ஓடிய தூரமும் நேரமும் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| மணித்தியாலம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| மைல் | 4 | 9 | 15 | 22 | 30 |

"கிருவ்" கீறி $2\frac{1}{2}$ மணித்தியாலத்தில் அது எவ்வளவு தூரம் ஓடியதென்பதையும், 25 மைல் எவ்வளவு நேரத்தில் ஓடியதென்பதையும் அறிக.

**6. வயது 7 தொடங்கி 14 வரையுமுள்ள சிறுவரின் சராசரி உயரம் பின்வருமாறு:—**

| **வயது (ஆண்டு)** | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **உயரம் (அங்குலம்)** | 46 | 47 | 49·7 | 52 | 53·5 | 55 | 57 | 59·3 |

**ரேகா படமொன்று வரைந்து 10 வயது 3 மாதத்தில் சராசரி உயரமெவ்வளவென்று காண்க.** ஜே. எஸ். ஸி. ஜூலை, 1933.

**7.** பின்வருஞ் சோட்டுத் தொகைகளானவை ஒருவன் துவிசக்கர வண்டியில் ஓடிய தூரத்தையும் எடுத்த நேரத்தையும் குறிக்கின்றன:—

| நேரம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| தூரம் | 5 | 13 | 23 | 34 | 44 | 50 |

(i) கணன ரேகை கீறி அதிலிருந்து முதல் $2\frac{1}{2}$மணித்தியாலங்கள் ஓடிய தூரத்தையும் (ii) 40 மைல் ஓட எடுத்த நேரத்தையும் அறிக.

**8. பல்வேறு அட்சரேகைகளிலுள்ள இடங்களின் மிகக் குறைந்த பகல் நேரம் வருமாறு.**

| அட்சரேகை | 0° | 10° | 20° | 30° | 40° | 50° | 60° | $66\frac{1}{2}$° |
|---|---|---|---|---|---|---|---|---|
| மிகக் குறைந்த பகல் நேரம். | 12·0 | 11·4 | 10·8 | 10·1 | 9·2 | 7·9 | 5·5 | 0· |

(இவ்வளவு மணித்தியாலம்.)

**இதனைக் காட்ட ஒரு கணன ரேகை வரைக. அதிலிருந்து (i) 6° அட்ச ரேகையிலுள்ள இடத்தில் மிகக் குறைந்த பகல் நேரம் எவ்வளவு? (ii) எந்த அட்ச ரேகையில் மிகக் குறைந்த பகல் நேரம் 4 மணித்தியாலம் என்பவற்றைக் காண்க.**

எஸ். எஸ். ஸி. [பிறிலிம்] 1934.

**9.** 1921-ம் ஆண்டு ஜனவரி 1-ந் தேதி முதல் 1930 டிசெம்பர் 31-ந் தேதி ஈருக மாதவீத ஏற்றுமதியை லட்ச ரூபாய்க் கணக்காகக் குறிக்கும் அட்டவணையைக் கீழ்க்காண்க:-

| ஆண்டு | 1921 | 1922 | 1923 | 1924 | 1925 | 1926 | 1927 | 1928 | 1929 | 1930 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| லட்சம் | 2·3 | 2·1 | 3·1 | 2·5 | 2·6 | 2·7 | 2·1 | 2·4 | 2·8 | 3·0 |

மேற்குறித்த அட்டவணைக்கு உருவகம் (Graph) கீறி 1923-ம் ஆண்டு ஒகஸ்ற் மாத ஏற்றுமதி எத்தனை லட்சம் எனக்

காண்க. (ஒரே வருட ஏற்றத்தாட்சி மாசந்தோறும் ஒரே விதமானதாகக் கொள்க.)

**10.** சாயந்தரம் 1 மணிக்கு கொழும்பினின்று புறப்பட்டு 72 மைல் தூரமான கண்டி நோக்கிச் செல்லும் பஸ் வண்டி மணித்தியாலம் 18 மைல் வீதமாகப் போனால்

(i) நேரமும் தூரமும் காட்டும்ரேகை (Graph) வரைக.

(ii) ரேகையைக்கொண்டு கொழும்பிலிருந்து 49 மைலுக் கப்பாலுள்ள கேகாலையையும் கண்டியிலிருந்து 16 மைல்தூர மான மாவனெல்லையையும் எந்நேரம் பஸ் சேருமெனக் காண்க. (ரேகை கீற விசேஷ பத்திரம் கிடையாது.) சு. பா. வி. வ.

---

# பல இன அப்பியாசம் 2.

## க

**1.** கூட்டுக. $a^2-3b+5, 3a^2-6b+1, 2a^2+10b-9$.

**2.** $8x+6y-1$ இல் இருந்து $4x-3y+2$ஐக் கழிக்குக.

**3.** $a=2$ ஆயின் $2a^3-2a^2+a$ இன் விலை யாது ?

**4.** சுருக்குக. $17a-4b-[5a-3\{b-2(a-b)\}]$

**5.** விடுவிக்க. $2x+5=x+4$.

**6.** மணித்தியாலம் $x$ மைல் ஓடும் புகை வண்டி t செக் கனில் எத்தனை அடி தூரம் ஓடும்?

## உ

**1.** $a=2, b=-3$ ஆயின்

(i) $(a+b)(a^2-ab+b^2)$ (ii) $a^3-b^3$ என்பவற் றின் விலை காண்க.

**2.** $27n^3+9n^2-3n-10$ ஐ $3n-2$ ஆற் பிரிக்குக.

**3.** சுருக்குக. $a-[a-(a+b)-\{a-(a-\overline{b-a})\}]$

4. **விடுவிக்க.** (i) $\frac{x-5}{4}=\frac{2x-3}{7}$

(ii) $4(3x-7)-(4-x)-5=0$

5. (i) $x$ ரூபா $y$ சதம் எத்தனை சதம்?

(ii) 10 தோடம்பழங்களின் விலை $x$ ரூபா $y$ சதமாயின் 5 ரூபாய்க்கு எத்தனை பழங்கள் வாங்கலாம்?

6. ஒரு சமகோணக் கண்ணாடித்துண்டு $a$ அடி நீளமும், அந்நீளத்திலும் $b$ அடி குறைந்த அகலமுமுடையதாயின் அதன் சுற்றளவென்ன?

ரு

1. $x=2, y=5$ என்னும் விலைகளைக்கொடுத்து

(i) $(2x+y)(2x-y)-x^2$

(ii) $3x^2-y^2$ என்பன சமமெனக் காட்டுக.

2. $\frac{3}{4}(x+8)=\frac{2}{3}(6-x)+19$ என்னும் சமீகரணத்தை விடுவிக்க.

3. **சுருக்குக.** (i) $(x+y)^2-(x-y)^2$
(ii) $(80+5)^2-(80-5)^2$

4. ஒரு பிதா தன் மகனைப் போல் மூன்று மடங்கு வயதுள்ளவனாக இருக்கிறான். அவன் 15 வருடங்களுக்குமுன் மகனைப் போல 6 மடங்கு வயதுள்ளவனாக இருந்தானாயின் இப்போது ஒவ்வொருவருடைய வயதுமென்ன?

5. நீள்சதுர வடிவமுள்ள ஒரு கடுதாசித்துண்டு $3x$ அங். அகலமும், $4x$ அங். நீளமுமாயின் (i) அதன் சுற்றளவென்ன? (ii) அதன் பரப்பென்ன? ஜே. எஸ். ஸி...1934.

6. பின்வருஞ் சோட்டுத் தொகைகளானவை 1851-ம் ஆண்டு தொடக்கம் 1911-ம் ஆண்டு முடிய ஒரு தேசத்துக் குடிசனத் தொகையை உணர்த்துகின்றன.

| வருடம் | 1851 | 1861 | 1871 | 1891 | 1901 | 1911 |
|---|---|---|---|---|---|---|
| சனம் | 18 | 31 | 37 | 48 | 53 | 72லட்சம் |

கிறுவ் கீறி 1881-ம் ஆண்டின் சனத்தொகை காண்க.

## சு

1. சுருக்குக. $(x+y)^2+(x-y)^2-2(x+y)(x-y)$

2. (i) $a=-2, b=-5$ எனின்
$\frac{a+2b}{a-b}$ இன் விலை காண்க.

(ii) $q-(1-p)$ இலிருந்து $1-(p-q)$ ஐக் கழிக்குக.

—ஆசிரியபரீட்சை...1934.

3. விடுவிக்க. (i) $\frac{2x-7}{2}+x=\frac{1}{2}$ (ii) $3(7-x)+2(5-x)=1$

4. $x^4+11x^3+26x^2-21x+3$ ஐ $x^2+5x-1$ ஆற் பிரிக்குக.

5. A பெறுவதின் மூன்றிலொருபங்கு காசு B பெறுவதின் ஐந்திலொரு பங்குக்குச் சமமாகும்படி 40 ரூபாவை இருவர்க்கும் பகிர்க.

6. நூற்றுக்கும் நூற்றைம்பதுக்குமிடையிலுள்ள எண்களின் வர்க்கமூலம் பின்வருமாறு :-

| எண் | 100 | 105 | 110 | 115 | 120 | 125 | 130 | 135 | 140 | 145 | 150 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வர்க்க மூலம் | 10 | 10·2 | 10·5 | 10·7 | 11·0 | 11·2 | 11·4 | 11·6 | 11·8 | 12·0 | 12·1 |

ரேகாபடமொன்று வரைந்து 132 இன் வர்க்கமூலத்தைக் காண்க

—பிரவேசபண்டித பரீட்சை...1935.

## ரு

1. விடுவிக்க. $\frac{x-1}{2}-\frac{x-2}{3}-\frac{x-3}{4}=0$

2. (i) $(x^2+xy+y^2)$ ஐயும் $(x^2-xy+y^2)$ ஐயும் பெருக்கிய தொகையைக் காண்க.

(ii) $x=3; y=-3$ ஆயின் கண்ட விடை சரிதானுவென்பதைக் காண்க.

—எஸ். எஸ். ஸி...1933.

3. பிரிக்குக.

(i) $a^2 - b^2$ ஐ $a - b$ ஆல்

(ii) $a^3 - b^3$ ஐ $a - b$ ஆல்

4. முத்திரை அச்சிடாத $x$ தொகை கொண்ட சாதாத் தபாலுறைக் கட்டொன்றின் விலை $y$ சதங்கள். ஒவ்வொரு உறையிலும் 5 சதமுத்திரைகள் அச்சிடப்பெற்று $z$ சதங்களுக்கு விற்கப்பெறும் பிறிதோர் கட்டில் எத்தனை உறைகளுண்டு ?

5. இரு எண்களின் வித்தியாசம் 8. சிறிய எண்ணின் மூன்றிலொருபங்கு பெரிய எண்ணின் ஐந்திலொரு பங்குக்குச் சமன். இரு எண்களுமெவை ?

6. புகையிரதத்தில் செல்லுமொருவன் $x$ இருத்தல் நிறையுள்ள தன் சாமான்களைக் குறிப்பிட்ட தூரங் கொண்டு போவதற்கான கட்டணமாக $\frac{x}{2} - 45$ சதம் கட்டவேண்டும். அதன்படி 90 முதல் 200 வரைக்கும் $x$ ன் விலையைக் காண்டற்கான கணன ரேகை வரைக. இந்த ரேகையிலிருந்து

(i) ஒரு அந்தர் நிறையுள்ள சாமானுக்கு என்ன கட்டணம்?

(ii) கட்டணமின்றிக் கொண்டுபோகக்கூடிய சாமானின் நிறையென்ன என்பவற்றைக் காணக.

—ஜே. எஸ். ஸி...1939.

# இரண்டாம் பாகம்

## பொருளடக்கம்


1. கூட்டுச்சமீகரணம், பிரயோகம்.
2. சிணைகள்.
3. சி. சா. மு., பெ. சா. மு., வர்க்கமூலம்.
4. பின்னச் சுருக்கம், நான்கு விதிகள்.
5. வர்க்க சமீகரணம், ஆரம்பபகுதி.
6. பரீட்சைப் பத்திரங்கள்.

# அத்தியாயம் VI

## கூட்டுச்சமீகரணம்

இரண்டு மூன்று அறியப்படாத எண்களைக் கொண்டுள்ள சமீகரணங்களுமுண்டு. உதாரணமாக $2x-y=10$. இச்சமீகரணம் இரு அறியப்படாத எண்களைக் கொண்டுள்ளது. ஏதோ ஓர் எண்ணின் இருமடங்கிலிருந்து இன்னோர் எண்ணைக் கழிக்கின் வரும் மறுமொழி 10 என்பதே மேற்படி சமீகரணத்தின் அர்த்தம்.

இன்னும் இதுபோன்ற ஓர் சமீகரணம் தரப்படினே நாம் $x$, $y$ முதலியவை குறிக்கும் சரியான விலை அறிதல் கூடும். இரு சமீகரணங்கள் சேர்ந்துவரும் காரணம்பற்றிப் பின்வருஞ் சமீகரணங்கள் கூட்டுச் சமீகரணங்கள் என்றழைக்கப்படுகின்றன.

**உதாரணம் 1. விடுவிக்க.** $2x-y=10$ ... ... (i)
$x-y=4$ ... ... (ii)

**செய்கை.**

$$2x-y=10 \quad \ldots \quad \ldots \quad (1)$$
$$x-y=4 \quad \ldots \quad \ldots \quad (2)$$

கழிப்பின் $x \;=6$

$x$ இன் விலை 6 எனக் கண்டோம். இனி $y$ இன் விலை காணுதல் இலகு.

$$2x-y=10. \quad \ldots \quad \ldots \quad (1)$$
$$\therefore\ 2\times 6-y=10.$$
$$\therefore\ 12-y=10. \qquad \therefore\ -y=10-12=-2.$$
$$\therefore \left.\begin{array}{l} y=2 \\ x=6 \end{array}\right\}$$ மறு.

$\left\{ \text{சரிபிழை அறிதல்.} \begin{array}{ll} 2x-y=12-2=10 & (1) \\ x-y=6-2=4 & (2) \end{array} \right\}$

கூட்டுச் சமீகரணத்தில் தரப்பட்ட இரு சமீகரணங்களிலுமுள்ள $x$ இன் தொகை அல்லது $y$ இன் தொகை சமமாயிருந்தால் மாத்திரமே நாம் கூட்டும் அல்லது கழிக்கும்பொழுது மேற்படி அக்ஷரங்களில் ஒன்று மறையும். தரப்பட்ட கணக்கில் இரு வரிகளிலும் ஏதோ ஒன்றின் தொகை சமமாயில்லாவிடில் நாம் ஒரு பொது இலக்கத்தால் ஒரு சமீகரணத்தைப் பெருக்கி அல்

லது இரு இலக்கங்களால் இரு சமீகரணங்களேயும் முறையே பெருக்கி $x$ அல்லது $y$ இன் தொகையைச் சமப்படுத்தல் வேண்டும்.

**உதாரணம் 2.** விடுவிக்க. $4x - 2y = 4$ ; ... ... (i)
$3x + 4y = 25.$ ... ... (ii)

**செய்கை 1.** (i) ஐ 2 ஆற்பெருக்கின் $8x - 4y = 8$
இரண்டாம் சமீகரணம் $3x + 4y = 25$
கூட்டின் $11x = 33$
$\therefore x = 3$

$$\left\{\begin{array}{l} 4x - 2y = 4 \\ 12 - 2y = 4 \\ -2y = -8 \\ \therefore y = 4 \end{array}\right\} \qquad \left.\begin{array}{l} x = 3 \\ y = 4 \end{array}\right\} \text{மறு.}$$

**செய்கை 2.** (i) 3 ஆல் பெருக்கப்படின் $12x - 6y = 12$
(ii) 4 ஆல் ,, $12x + 16y = 100$
கழிப்பின் $-22y = -88$
$\therefore y = 4$

$$\left\{\begin{array}{l} 12x - 6y = 12 \\ 12x - 24 = 12 \\ 12x = 36 \\ \therefore x = 3 \end{array}\right\} \qquad \left.\begin{array}{l} x = 3 \\ y = 4 \end{array}\right\} \text{மறு.}$$

**செய்கை 3.** பிரதிகரண முறை.

$4x - 2y = 4$ ... ... (i)
$3x + 4y = 25$ ... ... (ii)
$4x = 2y + 4$ ... ... (i)

$$\therefore x = \frac{2y+4}{4}$$

இரண்டாம் சமீகரணத்தில் $x = \frac{2y+4}{4}$ என்பதைப் பிரதிகாரணஞ் செய்தால் $3\left(\frac{2y+4}{4}\right) + 4y = 25$

ஆகவே $\frac{6y+12}{4} + 4y = 25$

$\therefore 6y + 12 + 16y = 100$

$22y = 88$ $\therefore y = 4$

$$\therefore x = \frac{8+4}{4} = \frac{12}{4} = 3$$

எனவே மேற்படி சமீகரணங்களில்

$$\left.\begin{array}{l} x = 3 \\ y = 4 \end{array}\right\} \text{ம.று.}$$

**உதாரணம் 3.** **விடுவிக்க.**

5க—31 = 3ம;
4க = —10ம.

**செய்கை.**

5க—31 = 3ம
∴ 5க— 3ம = 31 ... ... (1)
4க = —10ம
∴ 4க+10ம = 0 ... ... (2)

(1) ஐ 4 ஆற் பெருக்கின் 20க—12ம = 124
(2) ,, 5 ,, 20க+50ம = 0
கழிப்பின் —62ம = 124
∴ ம = —2.

20க—12 × —2 = 124.
∴ 20க+24 = 124
∴ 20க = 124—24 = 100.

∴ க = 5, ம = —2 } ம.று.

## அப்பியாசம் 20.

**விடுவிக்க.**

1. $x+y = 10,$ $x-y = 4.$
2. $x+y = 12,$ $x-y = 6.$
3. க+ம = 12, க—ம = 0.
4. $x-y = 5,$ $x+y = 19.$
5. $x+y = 14,$ $x = y.$
6. $m+2n = 8,$ $3m-2n = 0.$
7. $3x+2y = 13,$ $3x-2y = 5.$
8. $2x+y = 23,$ $x-2y = 4.$

9. $a + 2b = 9,$
$2a + b = 12.$

10. $2x + 5y = 0,$
$3x - y = 17.$

11. $7அ - 5இ = 11,$
$3அ + 3இ = 15.$

12. $2x + y = 23,$
$4x - 19 = y.$

13. $4x + 3y = 7,$
$y + 42 = 5x.$

14. $7x + 6y = 71,$
$5x - 8y = -23.$

15. பின்வரும் சமீகரணங்களில் $x$ இனது விலையை $y$ இன் இனத்திற் காண்க.

(i) $x + y = 10.$ (ii) $x - y = 10.$

(iii) $2x + y = 10.$ (iv) $2x - y = 10.$

(v) $2x - y = 0.$ (vi) $3x + 2y = 5.$

(vii) $3x - 2y = 6.$ (viii) $3x - y = 17.$

(ix) $2x - 5y - 1 = 0.$ (x) $5x - 10 = 5y.$

**விடுவிக்க.**

16. $x = 3y - 2,$
$9y = 4x - 7.$

17. $3x - y = 7,$
$5x = 9y + 41.$

18. $9த - 11 = 4ந,$
$19த - 17 = 10ந.$

19. $13 + 2y = 9x,$
$3y = 7x.$

பின்வரும் சமீகரணங்களில் அடைப்புக்குறிகளை நீக்கி அல்லது வேறு வகையில் சுருக்கியபின் சமீகரணங்களை விடுவிக்க.

20. $x + 3(x - y) = 23,$
$x + y = 11.$

21. $5(2x - 3y) = 25,$
$3(x + 5y) = 105.$

22. $2x + (y - 10) = 15,$
$y + (x - 50) = 2y.$

23. $2(x + y) - 3(y - x) = 12.$
$4x + 3y - 2 = 0.$

24. $2(x+y)=26,$
$3(x-y)=21.$

25. $1\frac{1}{2}\ x+2\frac{1}{8}\ y=22,$
$2\frac{1}{2}\ x-7\ y=4.$

மேலே தரப்பெற்ற கூட்டுச் சமீகரணங்களன்றி இன்னுங் கடினமான அப்பியாசங்களுமுள. இவற்றைப் பின்வரும் உதாரணங்களிலிருந்து விளங்கிக்கொள்க.

**உதாரணம் 4. விடுவிக்க.**

$$\frac{a+b}{8}+\frac{a-b}{6}=5 \quad \ldots \quad \ldots \quad \text{(i)}$$

$$\frac{a+b}{4}-\frac{a-b}{3}=10 \quad \ldots \quad \ldots \quad \text{(ii)}$$

**செய்கை.**

$$6\,(a+b)+8\,(a-b)=48\times 5 \quad \ldots \quad \ldots \quad \text{(i)}$$
$$3\,(a+b)-4\,(a-b)=12\times 10 \quad \ldots \quad \ldots \quad \text{(ii)}$$

$$6a+6b+8a-8b=240 \quad \ldots \quad \ldots \quad \text{(i)}$$
$$3a+3b-4a+4b=120 \quad \ldots \quad \ldots \quad \text{(ii)}$$

**சுருக்கின்**

$$14a-2b \quad =240 \quad \ldots \quad \ldots \quad \text{(i)}$$
$$-a+7b \quad =120 \quad \ldots \quad \ldots \quad \text{(ii)}$$

இரண்டாம் சமீகரணத்தில் 14 ஆற் பெருக்கி $a$ ஐச் சமப் படுத்தினல்

$$14a-2b=240 \quad \ldots \quad \ldots \quad \text{(i)}$$
$$-14a+98b=1680 \quad \ldots \quad \ldots \quad \text{(ii)}$$

கூட்டின் $96b=1920 \qquad \therefore b=20$

$b=20$ என்பதை (i)ல் பிரதிகரணம் செய்க.

$$14a-40=240$$
$$\therefore\ 14a=280$$
$$\therefore\ a=20 \text{ எனவே } \left.\begin{array}{l} a=20 \\ b=20 \end{array}\right\} \text{ மறு.}$$

**உதாரணம் 5. விடுவிக்க:**

$$\frac{3}{x} + \frac{2}{y} = 2,$$

$$\frac{9}{x} - \frac{4}{y} = 1.$$

**செய்கை:**

(i) ஐ 2 ஆற் பெருகின் $\frac{6}{x} + \frac{4}{y} = 4$

$\frac{9}{x} - \frac{4}{y} = 1.$ (i)

கூட்டின் $\frac{15}{x} = 5$

$\therefore x = 3$

$x=3$ என்பதை (i) ல் பிரதிகரணம் செய்தால்

$$1 + \frac{2}{y} = 2$$

$$\frac{2}{y} = 1 \qquad \therefore y = 2.$$

எனவே $\left.\begin{matrix} x=3 \\ y=2 \end{matrix}\right\}$ மறு.

**உதாரணம் 6. விடுவிக்க.**

$$2x - y = x - 4y = 3x - 6$$

**செய்கை.**

மேலே தரப்பெற்ற உதாரணக் கணக்கிலிருந்து

$2x - y = 3x - 6$ ... ... (i)

$x - 4y = 3x - 6$ ... ... (ii)

என இரு சமீகரணங்கள் அமைத்துக்கொள்ளலாம்.

அல்லது $2x - y = x - 4y$ ... ... (i)

$x - 4y = 3x - 6$ ... ... (ii)

என இரு சமீகரணங்கள் அமைத்துக்கொள்ளலாம். இவற்றை முன் விளக்கப்பெற்ற ஆரம்ப உதாரணங்களின் முறைப்படி விடுவிக்கின் $x = 9$, $y = -3$ என்பன விடைகளாய் வரும்.

## அப்பியாசம் 21.

விடுவிக்க

1. $3x - 5y = 17$
   $4x + 3y = 42$ ஜே. எஸ். ஸி. 1939.

2. $2(3x - y) = 5(x - 2)$
   $3(x + 4y) = 2(y - 3)$ கேம்பிறிச் ஜூனியர் 1924.

3. $\frac{1}{5}x + \frac{1}{11}(y - 2) = 0$
   $5x - 3y = 33$ கேம்பிறிச் ஜூனியர் 1925.

4. $3(x - y) - \frac{1}{3}(x + y) = 30$
   $x + y + \frac{5}{8}(x - y) = 22$
   கேம்பிறிச் ஜூனியர் 1926.

5. $\frac{x}{3} - \frac{y}{5} = \frac{1}{6}$
   $5y - 3x = 3\frac{5}{6}$ கேம்பிறிச் ஜூனியர் 1928.

6. $5x = 30 + 3y$, $5y = 1 - 3x$ ஆனால்
   $3x^2 - 5y^2$ இன் விலை காண்க.
   கேம்பிறிச் ஜூனியர் 1929.

7. $3x - 2y = 4$, $2x - 3y = 5$ ஆனால்
   $\frac{x+y}{x-y}$ எவ்வளவு ? கேம்பிறிச் ஜூனியர் 1930

8. $2x - 3y = 23$, $3x + \frac{1}{2}y = 12$ ஆனால்
$2x + y$ எவ்வளவு? கேம்பிறிச் ஜூனியர் 1931.

9. $x$ம் $y$ம் என்ன விலையானால்
$x-2y-6=2x+y-15=4x-y-17$ ஆகும்?
எஸ். எஸ். வி. 1938.

10. $\frac{y+9}{5}=\frac{2x+1}{3}=\frac{x+y+2}{4}$
என்பதை விடுவிக்க. ஆசிரிய பிரவேசபரீட்சை 1941.

11. $3x-y=x+2y=7$
என்பதை விடுவிக்க. ஆசிரிய பிரவேசபரீட்சை 1951.

விடுவிக்க.

12. $\frac{x}{2}-\frac{y}{3}=\frac{1}{6}$; $\frac{y}{2}-\frac{x}{6}=5$.
கேம்பிறிச் ஜூனியர் 1923.

13. $\frac{2}{x}+\frac{3}{y}=2$; $\frac{10}{x}-\frac{9}{y}=2$
ஆசிரிய பிரவேச பரீட்சை.

14. $\frac{க+1}{ம}=7$; $\frac{க}{1+ம}=6$
ஆசிரிய பிரவேச பரீட்சை 1939.

15. $\frac{2x-3y}{x+6y}=\frac{6}{5}$ ஆனால்

(i) $y=-2$ ஆயிருக்கும்போது $x$ இன் விலையையும்

(ii) $x=-3$ ஆயிருக்கும்போது $y$ இன் விலையையும்
காண்க. கேம்பிறிச் ஜூனியர் 1926.

# கூட்டுச் சமீகரணக் கணக்குகள்

## (இரு அக்ஷர இலக்கப் பிரயோகம்)

**உதாரணம் 1.**

இரு எண்களின் கூட்டுத்தொகை 25. வித்தியாசம் 9. அவ்வெண்கள் எவை?

**செய்கை.**

ஒரு எண் $x$ எனவும் மற்றது $y$ எனவும் கொள்வோம்.

அப்போது $x+y=25$

$x-y=9$

$\therefore 2x=34 \quad \therefore x=17$

$y=8$

∴ குறிக்கப்பட்ட எண்கள் **17, 8** மறு.

(இதுபோன்ற கணக்குகள் தனிச்சமீகரண முறையிலும் செய்யப்பட்டிருத்தலைக் கவனிக்கவும்.)

**உதாரணம் 2.**

4 தோடைகளும் 6 அப்பிள்களும் ரூ. 1-36 ஆகும். 2 தோடைகளும் 4 அப்பிள்களும் 72 சதமாகும். ஒவ்வொன்றின் விலையுமென்ன?

**செய்கை.**

ஒரு தோடையின் விலை $x$ சதமெனவும், ஒரு அப்பிள் விலை $y$ சதமெனவும் கொள்வோம்.

அப்போது 4 தோடை விலை $4x$ சதம்

6 அப்பிள் விலை $6y$ சதம்.

ஆகவே கணக்கின்படி $4x+6y=136$ (i)

$2x+4y=74$ (ii)

$4x+6y=136$

(ii) × 2... $4x+8y=148$

கழிப்பின் $-2y=-12$ $\quad \therefore y=6$

$x=25$

எனவே ஒரு தோடை விலை **25** சதம்
ஒரு அப்பிள் விலை **6** சதம் } மறு.

**உதாரணம் 3.** இரு எண்களின் கூட்டுத்தொகையின் இரு மடங்கு **56.** அவ்வெண்களின் வித்தியாசம் **4.** குறித்த எண்களைக் காண்க.

**செய்கை.**

ஒரு எண் $a$ எனவும் மற்றது $b$ எனவுங் கொள்வோம்.

அப்போது $2(a+b) = 56$ ... ... (1)

$$a-b = 4 \quad \ldots \quad \ldots \quad (2)$$

$$2a+2b = 56 \quad \ldots \quad \ldots \quad (1)$$

$$2a-2b = 8 \quad \ldots \quad \ldots \quad (2)$$

கூட்டின் $4a = 64$

$$\therefore \; a = 16 \qquad \qquad \left(\begin{array}{r} 2(16+12)=56 \\ 16-12=4 \end{array}\right)$$

$$\therefore \; b = 12$$

∴ குறிக்கப்பட்ட எண்கள் **19, 12** மறு.

**உதாரணம் 4.**

இரு இலக்கங்களாலமையும் ஒரு எண் அவ்விரு இலக்கங்களின் மொத்தத்திலும் ஐந்து மடங்காகும். அவ்வெண்ணுடன் 9 கூட்டப்படின் இரு இலக்கங்களும் இடம்மாறி அமையும். குறித்த எண் யாது?

**செய்கை.**

$x$ பத்தின் தானமாகவும் $y$ ஒன்றின் தானமாகவும் கொள்க. அப்போது குறித்த எண் $10x+y$ எனவும் இடம்மாறி அமையும் போது $10y+x$ எனவும் வரும்.

ஆகவே $10x+y = 5(x+y)$ (i)

$$10x+y+9 = 10y+x \qquad \text{(ii)}$$

(i) ஐச் சுருக்கின் $5x = 4y$

(ii) ,, ,, $x+1 = y$

$$\therefore \; 5x = 4(x+1) = 4x+4$$

$$\therefore \; x = 4 \qquad \qquad \left.\begin{array}{r} 5x = 4y \\ 20 = 4y \\ \therefore y = 5 \end{array}\right\}$$

$$\therefore \; y = 5$$

ஆகவே குறித்த எண் **45** மறு.

[சரிபிழை காணல்: $45 = 5(4+5)$; $45+9=54$.]

## அப்பியாசம் 22.

**பின்வரும் கணக்குகளைக் கூட்டுச்சமீகரண முறையிற் செய்க—**

**1.** இரு எண்களின் கூட்டுத்தொகை 45, வித்தியாசம் 11. அவ்வெண்கள் யாவை?

**2.** 75 கூட்டுத்தொகையும், 13 வித்தியாசமுமுடைய இரு எண்களைக் காண்க.

**3.** இரு எண்களின் கூட்டுத்தொகை 32, வித்தியாசம் 6. அவ்வெண்களின் பெருக்குத் தொகை யாது?

**4.** நானும் என் நண்பனும் 50 ரூபா வைத்திருக்கிறோம். எனது பணத்தின் இருமடங்கும் நண்பனது தொகையின் நான்கு மடங்கும் சேர்ந்து 130 ரூபா. ஒவ்வொருவரிடமும் எவ்வளவு உண்டு?

**5.** A இடமும் B இடமும் ரூ. 72 உண்டு. B யிலும் பார்க்க A ரூ. 12 கூட வைத்திருக்கிறான். ஒவ்வொருவரும் எவ்வளவு வைத்திருக்கிறார்கள்?

**6.** 2 தோடையும் 5 அப்பிளும் விலை 86 சதம். மூன்று தோடையும் 5 அப்பிளும் விலை 94 சதம். ஒவ்வொன்றின் விலையும் என்ன?

**7.** ஒரு தோடம்பழத்தினதும் 2 அப்பிள் பழத்தினதும் விலை 32 சதம். மூன்று தோடம்பழமும் 4 அப்பிள்பழமும் விலை 76 சதம். ஒவ்வொன்றின் விலையுமென்ன?

**8.** 9 பென்சிலினதும் 4 பேனையினதும் விலை 92 சதம். ஒரு டசின் பென்சிலினதும் ஒரு டசின் பேனையினதும் விலை 156 சதம். ஒரு பென்சிலினதும் ஒரு பேனையினதும் விலை தனித்தனி யாது?

**9.** 11 கோழிக்கும் 7 வாத்துக்கும் விலை 55 ஷிலிங். 5 கோழிக்கும் 13 வாத்துக்கும் விலை 52 சிலிங். (i) ஒவ்வொன்றின் விலையுமென்ன? (ii) 10 கோழிக்கும் 15 வாத்துக்கும் விலையென்ன?

**10.** ஒரு மாடும் வண்டியும் 85 ரூபா. இரு மாடும் அவ்வண்டியும் 120 ரூபா. ஒவ்வொன்றின் விலையுமென்ன?

**11.** 4 இருத்தல் கோப்பியும் 10 இருத்தல் தேயிலையும் ரூ. 6-20. 6 இருத்தல் கோப்பியும் 3 இருத்தல் தேயிலையும் ரூ. 3-90. ஒரு இருத்தல் கோப்பிக்கும் ஒரு இருத்தல் தேயிலைக்கும் மொத்தம் எவ்வளவு காசு கொடுத்தல்வேண்டும்?

**12.** ஒன்பது மேசையினதும் ஏழு கதிரையினதும் விலை அல்லது பத்து மேசையினதும் இரண்டு கதிரையினதும் விலை 156 ரூபா. ஒரு மேசையினதும் ஒரு கதிரையினதும் விலை தனித்தனி யாது?

**13.** ஒரு வியாபாரி குதிரையும் ஆடுமாக 15 மிருகங்களை 825 ரூபாய்க்கு வாங்கினன். ஒரு குதிரை 135 ரூபா, ஒரு ஆடு 15 ரூபாவானல் ஒவ்வோர் இனத்திலும் எத்தனை மிருகங்கள் உண்டு?

**14.** ஒரு எண்ணின் இரு மடங்கும் இன்னோர் எண்ணின் மும்மடங்கும் சேர்ந்து 43. இவ்வெண்களினுடைய வித்தியாசத்தின் மும்மடங்கு 12. இரு எண்களையுங் காண்க.

**15.** இரு எண்களினுடைய கூட்டுத்தொகையின் மும்மடங்கு 120. இவ்வெண்களின் வித்தியாசத்தின் மும்மடங்கு 18. இரு எண்களையுங் காண்க.

**16.** இரு இலக்கங்களாலமையும் ஒரு எண்ணினது இலக்கங்களின் கூட்டுத்தொகை 11. இரு இலக்கங்களையும் இடம் மாற்றினல் அமையும் எண் முந்திய எண்ணிலும் 9 கூடியதாகும். முந்திய எண் யாது?

**17.** 10 க்கும் 100 க்கும் இடைப்பட்ட ஒரு எண்ணினது இலக்கங்களை இடம்மாற்றினல் அமையும் எண் முந்தியதிலும் 45 கூடுதலடையும். இலக்கங்களினது கூட்டுத் தொகையுடன் 7 ஐக் கூட்டின் விடை 18 ஆகும். குறித்த எண் யாது?

**18.** இரு இலக்கங்கள் கொண்டுள்ள ஒரு எண் இலக்கங்களின் கூட்டுத்தொகையிலும் நாலுமடங்கு பெரியது. அந்த எண்ணுடன் 18 ஐக் கூட்டின் இலக்கங்கள் இடம்மாறி அமையும். குறித்த எண்ணைக் காண்க.

**19.** தந்தை 16 வருடங்களின்பின் மகனிலும் இருமடங்கு வயதுடையராவர். 8 வருடங்களுக்குமுன் அவர் மகனிலும் 14

மடங்கு வயதுடையவர். இருவரினதும் தற்போதைய வயதென்ன ?

**20.** ஒரு பின்னத்தின் பகுதி யெண்ணுடன் 2 ஐக் கூட்டின் அப்பின்னம் $\frac{3}{5}$ ஆக மாறும். தொகுதி யெண்ணுடன் 1 ஐக் கூட்டின் $\frac{1}{2}$ ஆக மாறும். அப்பின்னம் யாது ?

## அத்தியாயம் VII.

# சினைகள் (Factors)

### பகுதி க.

பெருக்கலின் எதிரிடையான கிரியை சினைகாணலாகும். $(2a+b)$ ஐ $(a-2b)$ ஆல் பெருக்கப் பயின்றுள்ளோம். அவ்வாறு பெருக்கும்போது $2a^2-3ab-2b^2$ விடையாய் வரும். எனவே $(2a+b)$யும் $(a-2b)$யும் $2a^2-3ab-2b^2$ இன் சினைகளாகும்.

மேலே தரப்பட்ட விளக்கத்தின்படி ஒரு அக்ஷர கணிதத் தொடரானது இரண்டு முதலிய பல தொடர்களின் பெருக்குத் தொகையாயிருப்பின் பிந்திய தொடர்கள் முந்திய தொடரின் சினைகளெனப்படும்.

**உதாரணம்.**

$2a+2b$ ஆனது $a+b$ ஐ 2 ஆற் பெருக்க வருவது.

எனவே $2a+2b$ இன் சினைகள் 2ம் $a+b$ யுமாகும்.

$$2a+2b = 2(a+b)$$

சினை காணலில் முதற் கவனிக்கவேண்டிய விதி.—தரப்பட்ட தொடரிலுள்ள இலக்கங்களைப் பிரிக்கக்கூடிய ஓர் பொது எண் உளதா எனவறிந்து அதனால் மேற்படி தொடரைப் பிரித்து ஈவை அடைப்புக்குறிக்குள்ளும் அப் பொதுஎண்ணை வெளியிலும் வைத்தலாகும்.

**உதாரணம் 1.** $6xy^2+9xy-12x$ என்பதைச் சினைகளாக்குக.

**செய்கை.** மேற்படி தொடரில் $3x$ பொது

ஆகவே $6xy^2+9xy-12x$

$$=3x(2y^2+3y-4)$$

உதாரணம் 2. $7அ^3 + 21அ^2இ - 35அஇ^3$
$= 7அ(அ^2 + 3அஇ - 5இ^3)$

உதாரணம் 3. $40a^2bc^2 - 24a^2b^2d - 8a^2b$
$= 8a^2b(5c^2 - 3bd - 1)$

## அப்பியாசம் 23.

சினைகளாக்குக.

1. $ax + ab$
2. கம + கப
3. $ax + a^2$
4. $2x - 2y$
5. $x^2 - xy$
6. $21 - 56x$
7. $5x^3 - 15x^2y$
8. $x^2yz - xyz^2$
9. $ax - bx + cx$
10. $7ab - 7bc - 21bx$
11. $ac - bc + c$
12. $9அ^3 - 12அ^3 + 3$
13. $6a^4 - 4a^3$
14. $amn - 15bmn + 50mn$
15. $36x^2yz - 54xy^2z + 41xyz^2 - 18x^2y^2z^2$

---

# சினைகள் (பிரிவு உ)

சினைகளில் இரண்டு மூன்று எண்களையுடைய ஓர் தொடரே பொதுத்தொகையாய் வருதலுமுண்டு.

உதாரணமாக $a(x+y)+b(x+y)$

இங்கு $x+y$ பொது.

$x+y=F$ எனக் கொள்வோம்.

அப்போது $a(x+y)+b(x+y)$
$= aF + bF$
$= F(a+b)$ ஆனல் $F=x+y$

ஆகவே $F(a+b)=(x+y)(a+b)$
$\therefore a(x+y)+b(x+y)=(x+y)(a+b)$

இவ்வாறு

1. $a(x+y)+b(x+y)=(x+y)\ (a+b)$
2. $a(x-y)+b(x-y)=(x-y)\ (a+b)$
3. $a(x+y)-b(x+y)=(x+y)\ (a-b)$
4. $a(x-y)-b(x-y)=(x-y)\ (a-b)$

உதாரணம் 1. க(அ + இ)—ம(அ + இ)
= (அ + இ) (க—ம) மறு.

உதாரணம் 2. $2x+cx+2c+c^2$
$=x(2+c)+c(2+c)$
$=(2+c)\ (x+c)$ மறு.

உதாரணம் 3. $6mn-2ny-3m+y$
$=2n(3m-y)-1(3m-y)$
$=(2n-1)\ (3m-y)$ மறு.

உதாரணம் 4. $2x^2y+2yz-5x^2-5z$
$=2y(x^2+z)-5(x^2+z)$
$=(2y-5)\ (x^2+z)$ மறு.

உதாரணம் 5. $ax-by+bx-cx-ay+cy$
$=ax+bx-cx-ay-by+cy$
$=(ax+bx-cx)-(ay+by-cy)$
$=x(a+b-c)-y(a+b-c)$.
$=(x-y)\ (a+b-c)$ மறு.

## அப்பியாசம் 24.

சினைகளாக்குக.

1. $a(x+y)+b(x+y)$
2. $a(x-y)+b(x-y)$
3. க(ம—ப)—ச(ம—ப)
4. $n(x+y)-m(x+y)$
5. $5(2x-y)-b(2x-y)$
6. $x^2(x-a)+a^2(x-a)$
7. $ax+bx+ay+by$
8. $ax-bx+ay-by$
9. $ax-2x-ay+2y$
10. $6x-ax-6y+ay$
11. 2க + கம + 2ம + ம²
12. $n^2+3n-mn-3m$
13. $6a^2+3ab-2ax-bx$
14. $ab(x^2+1)-x(a^2+b^2)$
15. $ax-bx-cx-2a+2b+2c$.

## சினைகள் (பிரிவு ௫)

(i)
$$\begin{array}{r} x + y \\ x + y \\ \hline x^2 + xy \qquad \\ + xy + y^2 \\ \hline a^2 + 2xy + y^2 \end{array}$$

(ii)
$$\begin{array}{r} x - y \\ x - y \\ \hline x^2 - xy \qquad \\ - xy + y^2 \\ \hline x^2 - 2xy + y^2 \end{array}$$

(iii)
$$\begin{array}{r} x + y \\ x - y \\ \hline x^2 + xy \qquad \\ - xy - y^2 \\ \hline x^2 \qquad - y^2 \end{array}$$

**ஆகையால்,**

(i) $x^2+2xy+y^2=(x+y)\,(x+y)=(x+y)^2$

(ii) $x^2-2xy+y^2=(x-y)\,(x-y)=(x-y)^2$

(iii) $x^2-y^2=(x-y)\,(x+y)$

(i) இஃது இரு எண்களினுடைய கூட்டுத்தொகையின் வர்க்கமெனப்படும்.

(ii) இஃது இரு எண்களினுடைய வித்தியாசத்தின் வர்க்கமெனப்படும்.

(iii) இஃது இரு எண்களினுடைய வர்க்கத்தின் வித்தியாசமெனப்படும்.

**சினைகளாக்கும் முறை .—**

(i) $x^2+2xy+y^2$

$=x^2+xy+xy+y^2$

$=x\,(x+y)\;+y\,(x+y)$

$=\;(x+y)\,(x+y)$ மறு.

(ii) $x^2-2xy+y$

$=x^2-xy-xy+y^2$

$=x\,(x-y)\;-y(x+y)$

$=\;(x-y)\,(x-y)$ மறு.

(iii) $x^2-y^2$

$=x^2+xy-xy-y^2$

$=\;(x+y)-y\,(x+y)$

$=(x-y)\,(x+y)$ மறு.

உதாரணம் 1. $க^2+2க+1$

$=க^2+க+க+1$
$=க\,(க+1)+1(க+1)$
$=க(க+1)\,(க+1)$ மறு.

உதாரணம் 2.

$4a^2 + 4ab + b^2$
$=4a^2+2ab+2ab+b^2$
$=2a(2a+b)+b(2a+b)$
$=(2a+b)\,(2a+b)$

குறிப்பு.
(i) $4a^2 \times b^2=4a^2b^2$
(ii) $\sqrt{4a^2b^2}=2ab$.
(iii) $2\times 2ab = 4ab$.

உதாரணம் 3.

$9x^2+42xy+49y^2$
$=9x^2+21xy+21xy+49y^2$
$=3x(3x+7y)+7y(3x+7y)$
$=(3x+7y)\,(3x+7y)$ மறு.

(i) $9x^2\times 49y^2 = 441x^2y^2$
(ii) $\sqrt{441x^2y^2} = 21xy$.
(iii) $2\times 21xy = 42xy$

உதாரணம் 4.

$x^2-4xy+4y^2$
$=x^2-2xy-2xy+4y^2$
$=x(x-2y)-2y(x-2y)$
$=(x-2y)\,(x-2y)$ மறு.

(i) $x^2\times 4y^2=4x^2y^2$
(ii) $\sqrt{4x^2y^2}=2xy$
(iii) $-2\times 2xy=-4xy$.

உதாரணம் 5.

$4a^4-8a^2b^2+4b^4$
$=4(a^4-2a^2b^2+b^4)$
$=4(a^2+b^2)\,(a^2-b^2)$
$=4(a^2+b^2)\,(a+b)\,(a-b)$ மறு.

மேற்படி செய்யப்பட்டிருக்குங் கணக்குகளில் உதாரணம் 1–3 இன் கீழ் உள்ளன $x^2+2xy+y^2=(x+y)\,(x+y)$ என்னும் வாய்பாட்டிற்கடங்கியன. உதாரணம் 4-5 இன் கீழ் உள்ளன $x^2-2xy+y^2=(x-y)\;(x-y)$ என்னும் வாய்பாட்டிற்கடங்கியன.

மேற்படி கணக்குகளுக்குப் பக்கத்திற் செய்யப்பட்டிருக்கும் செய்கைகள் சினைகாணும்படி தரப்பட்ட தொடர்கள் எவ்வாய்பாட்டிற்குரியன என்பதை அறிவிக்கின்றன. சினை காணும்படி

தரப்பட்ட தொடர்கள் ஒவ்வொன்றிலும் மூன்று இலக்கங்கள் உள்ளன. முதல் இலக்கத்தினதும் கடைசி இலக்கத்தினதும் பெருக்குத் தொகையின் வர்க்கமூலம் அறிந்து அவ் வர்க்கமூலத்தின் இருமடங்கு, + அடையாளத்துடன் நடு இலக்கமாக வருமாயின் அப்போது தரப்பட்ட தொடர் $x^2+2xy+y^2=(x+y)\times(x+y)$ என்னும் வாய்ப்பாட்டிற்குரியதென்றும், — அடையாளத்துடன் வருமாயின் அப்போது தரப்பட்ட தொடர் $x^2-2xy+y^2=(x-y)\ (x-y)$ என்னும் வாய்ப்பாட்டிற்குரியதென்றும் கொள்க.

மேற்படி விதிகளுக்கமையாவிடின் அப்போது தரப்பட்ட தொடர் வேறு ஏதோ வாய்ப்பாட்டிற்குரியதென அறிக.

